
# காலத்தை வென்றவன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


"சிவதலம் ஆவரங்கால் வரலாறு"
வரலாற்றுச் சாசனம்
தனம் பெருக்கி பசிதீர்க்கும்
வாழ்பதியாம் ஆவரங்கால்
தீங்கனிகள் சிந்தவனி தாமருந்த
வாய்பிளக்கும் திவ்வியபதியாம்
மாறிவளம் வாரார் நிலை வந்திடினும்
ஆழ்நிலத்து நீர்பெருக்கி அமுதாட்டும்
வளங்கொண்ட கோடையிலும் மாரியென
குளிரூட்டும் புகழுரெம் ஆவரங்கால்.
சிவலை அரியகுட்டி
இராச நட்சத்திரம்
10.07.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தூர் கிராமசபையின் முன்னாள் உபதலைவரும்
## பிரபல சமூக தொண்டனுமான
## அமரர் மணற்பகுதி சி.அரியகுட்டி அவர்களின்
## நூற்றாண்டு ஞாபகார்த்த மலர்

## காலத்தை வென்ற அன்னார் அணிசெய்த நிறுவனங்கள்

ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயம் ஸ்தாபக தலைவர்

ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய ஸ்தாபக தலைவர்

ஆவரங்கால் கிழக்கு ப.நோ.கூ கிளை ஸ்தாபக தலைவர்


கலையகம் சன சமூக நிலைய ஸ்தாபக தலைவர்

அச்சுவேலி தெங்கு பனம்பொருள் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க ஸ்தாப உபதலைவர்

வீனஸ் விளையாட்டுக் கழகம் கரப்பந்துக்குழு ஸ்தாபக தலைவர்

ஆவரங்கால் கிராம அபிவிருத்திச் சங்க முன்னாள் உபதலைவர்

தமிழரசுக் கட்சி ஆவரங்கால் கிளை உபதலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பசுமையாய் எம் மனதில் பாய்ந்தோடும் அருவியென..........

பாராளுமன்றம்

சமய, சமூக, மொழி, இனத்துக்குத் தொண்டாற்றிய அமரர் சிவலை அரியகுட்டி நூறாவது பிறந்த நாள் நினைவு மலருக்கான செய்தி

சி.வி.கே.சிவஞானம்

உழைப்பால் உயர்ந்த உத்தமன்

இராச நட்சத்திரம்

புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின்

பொது வாழ்விலும் அரசியலிலும்

செய்நன்றி மறவா சிந்தனை ............

அனைத்தும் நிறைந்தவர்

ஊர் போற்றும் உற்ற நண்பன்

விஷ்ணு மான்மியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமையாய் எம் மனதில் பாய்ந்தோடும் அருவியென.........

ஈழவள நாட்டின் வடபால் அமைந்த இணையில்லா கல்வி, செல்வம், வீரம் நிறை மறத்தமிழர் வாழும் யாழ்பாடி பாணன் பெற்ற யாழ்ப்பாண நன்நகரின் வள்ளல்கள் நிறையூராம் புத்தூர் பதியினிலே நலிவுற்றுப் பொலிவற்ற புத்த கலட்டி எனுமூரில் ஒழுக்கமேவிய மணற் பகுதிக் குறிச்சியிலே சிவலை நல்லானுக்கும் வள்ளி நல்லாளுக்கும் 1918ம் ஆண்டு சித்திரை மாதம் 17ம் திகதி ஊரேற்றி உவந்து போற்றும் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் அரிய மகனாக அமரர் அவதரித்தார். இரண்டு பெண்களின் பின் இவரும் உதித்ததனால் அன்னையும் அக மகிழ்ந்து ஆரத்தழுவி முத்தமிட்டாள். பார்போற்ற வளர்ப்பேனென பேதை யால் புகழ்ந்துரைக்க முடியவில்லை. படித்தறியாக் குலம் - பணம் பொருள் எதுவுமில்லை - ஏதிலி என் செய்வாள். ஒரு வேளைக் கஞ்சிக் காயினும் ஓடாய் உழைத்திடுவானென உவகையொன்று அவள் முகத்தில் ஓரமாய் மின்னியது. தந்தையோ நாள் கூலி ஆனால் நாள் பல வேலையில்லை. கிடைத்த பொருள் கொண்டு கூழே அமுதமென கூடியுண்டு வாழ்ந்தார்கள். அகவை ஐந்ததனில் அனுப்பினார் பள்ளிக்கு. அங்கோ சட்டம்பிமாரின் தாங்கொணா வேலைப்பழுவின் மத்தியிலும் இரண்டு வகுப்புக்களை இயன்றவரை கடந்திட்டார். 7ம் வயததனில் 1925ம் ஆண்டில் அமரரின் தந்தையையும் ஆண்டவன் எடுத்து விட் டான். அந்தோ பரிதாபம் இரண்டு பெண்களுடன் இளையமகன் இரு வருடன் அமரரும் சேர்ந்து ஐந்து பிள்ளைகளை அன்னையவள் என் செய்வாள், கஷ்டமோ..... கஷ்டம் வறுமை குடும்பத்தை வாட்டியது.

பிஞ்சு வயதில் பிதாவைப் பிரிந்த ஏக்கம் ஒருபுறம் படிப்புக்குத் தேவையான பொருட்கள் வாங்க வசதியின்மை இன்னொருபுறம் பாடசாலை வேளையில் சட்டம்பிமாரின் ஏவலாளரான கொடுமை வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறம் இதனால் தந்தை மறைந்த அடுத்த வருடமே அமரர் பள்ளியிலிருந்து பிரியாவிடை பெற்றார். அப்போதைய நிலையின் கட்டாயக் கல்விமுறை இல்லை இதனால் நலிவுற்ற சமூக மக்கள் இளவயதிலேயே பாடசாலை யிலிருந்து விலகவேண்டிய நிர்ப்பந்தம். படித்து ஓரளவு தாண்டினாலும் அரசவேலையொன்றை இவர்களினால் பெற முடியாது ஏனெனில் அப் போதைய வேலை வாய்ப்புக்களெல்லாம் பரீட்சை முறையன்றி சிபார்சு முறையிலேயே தங்கியிருந்தது. இதனால் நலிவுற்ற சமூகத்தினர் இவற்றைத்தாண்டி வேறொன்றைப் பெறமுடியாதிருந்தனர். பள்ளியிலோ சட்டம்பிமாரின் கொடுமை வீட்டிலோ வறுமையின் தாண்டவம் அந்தப் பிஞ்சு என்ன செய்யும் 3ம் வகுப்புடன் பள்ளிப்படிப்பும் பகற்கனவாய்ப் போனது. ஆனாலும் சிறுவயதானாலும் குறுகிய காலத்தில் பள்ளியில் தான் பெற்ற கஷ்டமான அனுபவங்கள் பசுமரத்தாணியென பதிந்தன உள்ளமதில் பள்ளி வட்டார மேட்டுக்குடிகளும் பரிதவித்து நிற்கவில்லை.

மாறாக சந்தோஷத்தால் குதித்தது. ஏனெனில் ஆறேழு ஆண் டின் பின் அனுபவமிக்க கூலியொன்று தமக்காக உழைக்குமென தாங் கொணா சந்தோஷம் இங்கோ தன்பேரெழுதுவான் - தடையின்றிக் கதைப்பான் - தமக்காக உழைப்பான் - தருவான் ஒரு வேளைக் கஞ்சி யென - தனயனைப் பெற்றவருக்கும் தாங்கொணா சந்தோஷம்.

இரண்டு பக்கமும் இணையற்ற சந்தோஷம். சிறுவன் இவனுக்கோ இதயம் பிழிந்து இரணம் பிரவகிக்க ஏக்கப் பெருமூச்சுடன் ஏவல் செய் சிறு கூலியானான். காலங்கள் கடந்தோடின. அகவை 15ல் அமைதியாக யோசித்தாள் கூலித்தொழிலென்ன குடும்பத்தையா வாழ வைக்கும். தனியாக சிந்தித்தான் - தானேற வழியென்ன - சொந்தமாக தொழில் செய்தால் சொற்பமாவது மிஞ்சுமே - உள்ளூர் வளம் கொண்டு உயர்வாய் வாழலாமே - உய்விக்கும் வேலையிலே உயர்வு தாழ்வு ஏது மில்லை. உந்திய சிந்தையும் ஊக்கமும் உடைப்பெடுக்க மரபு வழிவிவ சாயமுடன், கால் நடைவளர்ப்பும் சிறந்த தொழிலென உறுதியாக நம்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் அமைதி கொண்டது எதிர்காலம் ஒளிக்கீற்றாய் மின்னியது. தொழில் வல்லுனரைத் தேடிப் பயிற்சி பெற்றான். விருப்புடன் கற்றால் எம் முயற்சியும் கைகூடும். அதற்கு இவனும் இலக்கணமானான் இப்போது விவசாயம், கால்நடை வளர்ப்பு என இரு தொழில்கள் வருமானத்தைத் தேடித்தந்தன தொழில் பெருகின. துணைக்கு ஆள் தேடலானான். பலரை அமர்த்தி தொழிலில் அபிவிருத்தி கண்டான். தன் தகப்பன் வழி மைத்துனனான கிருஷ்ணன் தம்பிமுத்து வாராதுவந்த மாமணியாய் வாய்த்ததாக பலமுறை கூறினார். தான் தூங்கும் போதெல்லாம் தன்னைத் தட்டி எழுப்பி ஊக்குவித்து பொருள் தேட வைத்த பெருமை அவரையே சாருமென கூறிப் பெருமைப்பட்டார். பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லையென்ற கூற்றுக்கிணங்க விலகிய சொந்தங்களெல்லாம் ஒட்டி வரத் தொடங்கின. முயற்சி திருவினையாக்கும் என்ற கூற்று இவன் விடயத்தில் முன்னுதாரணமாகத் திகழ்ந்தது.

வடமராட்சி வதிரியுடன் பலகால சம்மந்தத்தொடர்பும் இரத்த உறவும் இருந்தது மணற்பகுதி கிராமத்துக்கு இந்த வகையில் படப்படி சீனியப்பு என்பவரின் நெருக்கமான பழக்கமும் அமரருக்கு கிடைத்தது. அந்த 1940களில் வதிரியில் ஒரு கரப்பந்தாட்ட குழு செயற்பட்டு வந்தது. எமது கிராம இளைஞர்கள் தமது பொழுது போக்காக தாச்சி, கிட்டியடி, கபடி, படல்பாய்தல், கெந்தியடித்தல் முதலான பாரம்பரிய விளையாட்டுக்களில் தம்மை ஈடுபடுத்தி வந்தனர். இந்த விளையாட்டுக்களின் மூலம் வெளியூர்களுடனான தொடர்பாடல்களிலோ போட்டிகளிலோ பங்குபற்ற முடியாத நிலை இருந்தது அதனால் கரப்பந்தாட்டக்குழு ஒன்றை அமைக்க வேண்டுமென இளைஞர்கள் தீர்மானித்தனர். இந்த நிலையில் சீனியப்புவை பயிற்சியாளராகக் கொண்டு 1944வாக்கில் அமரர் அவர்களின் தலைமையில் கரப்பந்தாட்டக் குழுவொன்று ஆரம்பிக்கப்பட்டது. அக்குழுவானது புத்தகலட்டி விளையாட்டக் கழகமென அமைக்கப்பட்டது. இக்கழகமானது பல போட்டிகளைக்கண்டதோடு சென்ற இடமெல்லாம் வெற்றிவாகை சூடியதெனலாம் இக்குழுவிலே அமரர் தலைமையில் அமரர்களான ச.கிருஷ்ணன், ச.செல்லன், வே.கதிரன்(தம்பு), க.ஆறுமுகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.தம்பிமுத்து, வ.ஐயாத்துரை, தே.வடிவேலு, வ.கனகு, இ.நாராயணன் ஆகியோர் வீரர்களாக செயற்பட்டு கழகம் சிறப்படைய செயல்புரிந்தனர்.

இப்புத்தகலட்டி விளையாட்டுக்கழக கரப்பந்தாட்டக் குழுவே பின்னாளில் வீனஸ் விளையாட்டுக் கழகமென பரிணமிக்க காற் கோளாய் அமைந்தது. அந்தக் காலத்தில் கோப்பாய் பொலிசாரினால் மாகாண ரீதியாக கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி வருடாவருடம் நடாத்தப் படுவது வழக்கம். இந்த வகையில் நடைபெற்ற ஒரு சுற்றுப்போட்டியில் யாழ் பொலிஸ் குழுவுக்கும் புத்தகலட்டி விளையாட்டுக் கழகத்துக்கும் இறுதிப்போட்டி ஒன்று நடைபெற்றது. அமரரின் தலைமையில் எமது விளையாட்டுக் கழகமும் மிகவும் திறமையாக விளையாடிக் கொண்டி ருந்தது. பெரும்பாலும் வெற்றி எமது கழகத்துக்கே சார்பாக இருந்தது. இதை விரும்பாத நடுவராக பணியாற்றிய பொலிஸ் அதிகாரி எமது கழகத்துக்குப் பாதகமான தீர்ப்புகளை வழங்கிக் கொண்டிருந்தார். இதனால் கழகம் தோல்வியடைந்ததென அறிவிக்கப்பட்டது. இப் போட்டிக்கு பிரதம அதிதியாக நீதிவான் தம்பித்துரை அவர்கள் கலந்து கொண்டிருந்தார். நடுவரின் தீர்ப்பை அவரின் மனச்சாட்சியால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. இதனால் தனதுரையில் அதை சூசகமாக தெரி வித்து பரிசளிப்பின் போது தனது சொந்தப்பணத்திலிருந்து சிறுதொகை பணத்தை எடுத்து எமது கழக தலைவரிடம் கொடுத்து அந்த மனக்கிலே சத்தைத் தீர்த்துக் கொண்டார். ஒரு நலிவுற்ற சமூகத்தை பிரதிநிதித்துவப் படுத்திய கழகமானாலும் அதனது வெற்றிகளை ஊரபிமானத்துடன் பார்த்த புத்தூர் ஆவரங்கால் சமூகம் எல்லாம் தங்களது வெற்றியாகவே கருதிக் களிகொண்ட சம்பவங்களெல்லாம் அக்காலத்தில் ஏராளம். புத்த கலட்டி வாழ் மக்களெல்லாம் புளகாங்கித மடைந்தனர். இவ் விளையாட் டுக்கழகப் புகழினால் ஒரு ஒடுக்கப்பட்ட சமூக மக்கள் உயர்வாக மதிக்கப் பட்டனர். கத்தியின்றி இரத்தமின்றி அவர்களின் உயர்வுகள் சகோதரத் துவத்துடன் அங்கீகரிக்கப்பட்டன. இந் நலிவுற்ற சமூகமானது மரபுரீதி யாக தோட்டக் கூலியாகவும், சீவல் தொழிலாளராகவும், சிறுகடல் மீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடியாளராகவுமே காலத்தை ஓட்டினர். இவர்களை மரபுவழி நீங்கி வேறு தொழில்களைப் பயிற்றுவித்து மேம்பட வைக்கும் நோக்கமாக இ.நாராயணன், ச.கிருஷ்ணன், தே.வடிவேலு, த.வைத்திலிங்கம், கனகசபை ஆகியோருடன் இணைந்து சிறு கைத்தொழில் திணைக் களத்தின் கீழ் இயங்கும் ஒரு பயிற்சிப் பாடசாலையை நிறுவினார். இதில் தும்புத் தொழில், பன்னவேலை, நெசவுத்தொழில் முதலிய தொழில்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டு சுயவேலை வாய்ப்பும் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் சிறந்தரக தேயிலை அடைக்கவென வேலைப்பாடமைந்த சிறு ஓலைப் பெட்டிகளும் வண்ணமிகு பாய்களும் அரச வைத்தியசாலை படுக்கை விரிப்புக்களும் கயிறுகள் மற்றும் தும்புசார் பொருட்களும் உருவாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. இதன் மூலம் பொருளாதாரம் ஓரளவு மேம்படக்கூடியதாயிருந்தது. இப்பயிற்சி நிலையத்தில் நெசவுத் தொழிலுக்கான கைத்தறியை தானே நிறுவி நெசவுப் பகுதி பொறுப்பாளரா கவும் செயற்பட்டார்.

தும்புத் தொழில்களுக்கான பொறிகளை ச.கிருஷ்ணன், இ.நாராயணர் ஆகியோர் நிறுவி பலர் வேலைவாய்ப்பைப் பெற உதவி னர். வண்ண வேலைப் பாடமைந்த பெட்டிகள், பாய்கள் உருவாக்குவதில் அமரர் அழகம்மா அவர்கள் தேர்ச்சியுடையவராக காணப்பட்டாரென அறியவருகிறது.

இந்தப் பயிற்சிக் கூடத்துக்கு மட்டக்களப்பை சேர்ந்த திரு.சாமித் தம்பி அவர்கள் பொறுப்பாசிரியராக நியமிக்கப்பட்டு பயிற்சிகளை வழி நடத்தினர் 1940களின் இறுதியிலும், 1950களின் ஆரம்பத்திலும் இப் பயிற்சிகள் செவ்வனே நடைபெற்றன. தற்போதைய ஆவரங்கால் கிழக்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கத்துக்கு தெற்குப் புறமான பெரும் பான்மைச் சமூகத்துக்கு சொந்தமான காணியிலேயே பயிற்சி நிலையம் ஓலைக் கொட்டகையில் அமைந்தது. இதில் வாசிகசாலையும் அமைத்து அதன் முதல் தலைவராகவும் அமரர் செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1947ம் வருடம் அமரரை முப்பதாவது வயதில் கல்யாண பந்தத்துள் கொண்டுவர உறவினர்கள் முயன்றனர். அப்போது செல்வந் தராகவும், ஓரளவு நிலவுடமையாளராகவுமிருந்தவர் இவரது தாய்வழி ஒரே மாமனான வயிரவன் (விசும்பன்) அவர்கள். அவரது மூத்த மகளான தெய்வானையை இவருக்குப் பேசிய போது செல்வந்தராகிய அவர் பெண் கொடுக்க மறுத்துவிட்டார். தான் மதிக்கக்கூடிய அளவு பொருளாதாரநிலை அவரிடம் இல்லை என காரணம் கூறினார். இதனால் தனது பொருளாதார நிலையை உறுதிப்படுத்த வேண்டிய நிலை இவருக்கு. இதனால் தனது பணத்தில் தாலிக்கொடியொன்றை எடுத்துக் காட்டிய பின்பே மாமனார் பெண் கொடுக்க முன்வந்தார். திருமணமும் மிக எளிமையாக நடைபெற்றது. அடுத்த வருடம் (1948)ம் ஆண்டில் மூன்று மிக முக்கிய சம்பவங்கள் நடைபெற்றன. வாசிக சாலையின் நிர்வாக தலைவராக இருந்து, அதற்கு தற்காலிக கொட்டில் அமைத்து அதை மக்கள் பயன்படுத்த வழி செய்தார். இதனாலே மக்கள் பத்திரிகை வாசித்தலின் மூலம் உலக நடப்புகளை தெரிந்து வழி நடக்க உதவியது. அன்னாருக்கு தலை மகனும் பிறந்தார். பிறந்த போது பெரிதுவந்த அவர் அதற்கு அற்ப ஆயுசையே ஆண்டவன் அளித்துள்ளார் என்பதை அப்போது அறியவில்லை. அந்த வருடந்தான் அவர் சொந்த மாக தோட்ட நிலமொன்றை வாங்கினார். இதற்கான பணம் கிடைத்த வழியையும் பெருமையுடன் கூறினார்.

அக்காலத்தில் புகையிலை, வெங்காயம், மிளகாய், மரக்கறிப் பயிர்களே பெரும்பாலாக பயிரிடப்பட்டு வந்தது. அப்போது அதிக மழை வீழ்ச்சி கிடைக்கும் காலமாகையினால் வெங்காயம் மிளகாய் மரக்கறிப் பயிர்கள் சிலவேளைகளில் மழையினால் அழிந்து போகக் கூடியதாயிருந் தது. நீர் பாய்ச்சுவதற்காக துலாவும் பட்டையும் தான் பாவிக்கப்பட்டன. ஆனாலும் சில தனவந்தர்கள் சூத்திரம் அமைத்து மாடுகளின் மூலம் இயக்கி வந்தனர். துலா மிதித்துவிட்டே அதிகமான மாணவர்கள் பள்ளி செல்வார்கள். இதற்காக அதிகாலை 4மணியளவில் தூக்கக் கலக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் மாணவர்கள் துலாமிதிக்க செல்வார்கள். இதற்காக துலாமிதித்துக் கொண்டிருக்கும் போது பலர் தூக்கக் கலக்கத்தில் துலாவிலிருந்து வீழ்ந்து படுகாயமடைந்த சம்பவங்களுமுண்டு. இத்தகைய துலாமிதிப்பை முன்னோர்கள் ஒரு கலையாக கருதினர். இந்தக் கலையில் எல்லாராலும் தேறமுடியாது. இருந்தாலும் இக் கலையில் வல்லவர்கள் அக்காலத்தில் இருந்தமை மறுக்கப்படக் கூடியதல்ல.

பயிர்களைப் பொறுத்தவரை புகையிலையானது ஓரளவு வருமானந்தரும் பணப்பயிராக இருந்தது குறிப்பிடத்தக்கது.

அக்காலத்தில் புகையிலை பயிரிட்டு உலர்த்தி இந்திய மலையாள நகருக்கு ஏற்றுமதி செய்வது வழக்கம். இதற்காக மலையாள புகையிலை உற்பத்தியாளர் ஏற்றுமதியாளர் சங்கமொன்று இயங்கி வந்தது. அதில் ஒரு சாதாரண உறுப்பினராக இவர் சேர்ந்து கொண்டார். தான் விளைவித்த புகையிலையை உலர்த்தி கூட்டுறவுச் சங்கத்துக்கு கொடுத்தார். இதன்போது ஒரு தொகையை கிரமாகப் பெற்றார். இத்துடன் இவ்விடயம் முற்றுப் பெற்றதென எண்ணிவிட்டார்.

ஆனால் பலரிடம் இப்படியாகப் பெற்ற புகையிலையை ஏற்றுமதி செய்தபோது எதிர்பாராதவிதமாக விலை உயர்வடைந்ததனால் சங்கத்துக்கு உச்சக்கட்ட இலாபம் கிடைத்தது. இதனால் இவருக்கும் முதல் கிடைத்த கிரயப் பணத்திலும் பார்க்க இரண்டு மடங்கு பணம் பங்குலாபமாக கிடைத்தது. இது விவசாயத்தில் இவருக்கு கிடைத்த இலாபத்தோடு கூட்டுறவுத்துறையில் இவருக்கு உயர்ந்த ஒரு பற்றுதலையும் ஏற்படுத்தியதெனலாம். இந்தப் பங்குலாபமே விவசாயத்துக்கான ஒரு நிரந்தர முதலீடாகவும் மாறியது. இந்த பணம் தான் 1948ம் ஆண்டு சொந்தமாக தோட்டநிலம் வாங்க உதவியது. இப்படியாக மிகவும் சந்தோஷத்துடன் வாழ்ந்த போதுதான் குழந்தை மிகவும் நோய்வாய்ப்பட்டது அதைக் குணமாக்க எவ்வளவோ வைத்திய முயற்சிகளை மேற்கொண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையைக் காப்பாற்ற முடியவில்லை. மொட்டு முகிழ்த்த சிறிது காலத் துக் குள்ளேயே கருகியது இந்த நிகழ்வானது அன்னாரது வாழ்க்கையில் சோகத்தை உருவாக்கினாலும் பொது வாழ்வில் அவருக்கிருந்த கரிசனையால் அதைக் காலப்போக்கில் மறந்து விட்டார்.

இவருக்கு இரு சகோதரிகள் இருந்ததாக முன்னர் குறிப்பிட்டிருந் தோம். 1930களில் அவர்கள் இருவருக்கும் உறவு முறையில் தன் செலவிலேயே திருமணத்தையும் செய்து வைத்திருந்தும், அவர்களது குடும்பத்தின் மேன்மைக்காக ஆலோசனையும் வழங்கி வந்தார். இதில் இளைய சகோதரியின் கணவனால் நாளாந்தம் சகோதரி துன்புறுத் தப்பட்டு வந்தார். இதைத் தாங்க முடியாத அமரர் - சகோதரியின் விருப் பின் பேரில் திருமணத்தை முறித்து அவரையும் தன்னுடனேயே வைத் துக் கொண்டு அவருக்கான தேவைகளையும் நிறைவு செய்து கொடுத்தார்.

அமரருக்கு ஒரு சிறப்பான ஆற்றலும் துணிவுமிருந்தது. கிராம வழக்கில் கிடைக்கக்கூடிய தொழில் உபகரணங்களை பார்த்து ஆராய்ந்து தன்னால்செய்ய முடியுமா என யோசிப்பார். அந்த நேரத்தில் பலர் மீன்பிடியாளராகவும் விவசாயிகளாகவும் இருந்ததாக முன்னர் குறிப்பிட்டிருந்தேன். அந்த வகையில் மீன்பிடியாளருக்கான வலைகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் விவசாயத்துக்கான மரக்கலப்பைகள், மண்வெட்டிகளுக்கு பிடிகள் போடுதல் முதலியவற்றிலும் கைதேர்ந் தவனாயிருந்து அதிலும் அவருக்கு வருமானம் கிடைக்க வழிசமைத்தார்.

நலிவுற்ற சமூக மக்களின் கல்வி நிலை சம்மந்தமாக முன்னர் குறிப்பிட்டிருந்தேன். குடும்பநிலை அப்போதைய பொருளாதார சமூக சூழல்கள் என்பன அவர்களின் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தின. புத்தூர் கிராம சபைக்குட்பட்ட சமூக மக்கள் மேட்டுக்குடியினரால் வஞ்சிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டனர். அதைஎதிர்த்துப் போராட ஏற்றவாறு பலமின்றிக் காணப் படனர். இவற்றை நிவர்த்தி செய்யும் முகமாகவும் கல்வியை எந்த நெருக் கடிகளுமின்றி கல்வியை புகட்டுவதற்காக 1956ம் ஆண்டளவில் ஒரு பாடசாலை அமைக்கவேண்டியதன் தேவை உணரப்பட்டது.

அப்போது புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி நலிவுற்றோர் சமூகத்தைப் பாடசாலையில் சேர்ப்பதில்லை. ஆவரங்கால் மெதடிஸ்த மிஷன் பாடசாலை (தற்போது மகாஜனா) நலிவுற்றோர் சமூகத்தைச் சேர்த்துக் கொண்டாலும் எம்மவரை 2ம் தரப்பிரஜைகளாகவே கணித் தனர். வகுப்பில் தனியான வாங்கு, தாகமானால் சேர்த்து வைத்திருக்கும் நீரைப்பருகமுடியாது. கிணற்றில் போய்த்தான் குடிக்க வேண்டும். அதுவும் தாம் அள்ள முடியாது. உயர் வகுப்பினர் ஒருவர் வந்து அள்ளித் தந்தால் தான் குடிக்கலாம். அவர்கள் வரமறுத்தால் தாகத்துடன் தான் கல்வியைத் தொடர வேண்டும். புத்தூர் மெதடிஸ்த மிசன் பாடசாலை யிலும் இதே கதைதான், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத் திலும் நம்மவர்க்கு அனுமதியில்லை. இப்படி இருந்த போதிலும் அமைதி வாழ்க்கையில் நம்பிக்கை கொண்ட நம்மவர்கள் எதிர்த்தும் போராட விரும்பவில்லை. புத்தூர் கிராம சபையின் 1/3 பங்கு மக்களின் கல்வி கற்கும் உரிமை தடங்கலுக்குள்ளானது.

இதனால் தங்களுக்கென ஒரு பாடசாலையை நிறுவி அதைத் திறம்பட நடாத்திக் காட்ட விரும்பினார்கள். இதற்கான முயற்சிகளிலும் இறங்கினர். எமது பகுதி மக்கள் பெரும்பாலும் தந்தை செல்வாவின் கொள்கையினால் ஈர்க்கப் பட்டிருந்தனர். அதனால் தமிழரசுக்கட்சியின் செல்வாக்கு நலிவுற்ற நம் மக்களை நம்பிக்கை கொள்ள வைத்திருந்த நேரம் கோப்பாய் கோமகன் வன்னியசிங்கம் அவர்கள் கோப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தது. அவர்களது நம்பிக்கை யின் அத்திவாரமாகியது. கரவெட்டி மேற்கைச் சேர்ந்த வரும் அமரரின் தந்தை வழி உறவினரும் கல்விச் சமூகத்துடன் நெருங்கிய தொடர்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக சேவையில் மிகுந்த ஆர்வமுடையவரான திரு.த.இரத்தினம் ஆசிரியர் அவர்களது அனுபங்களை நம்மவர் அணுகிப் பகிர்ந்தனர். அவர்களின் மூலம் அல்வையூர் கவிஞர்.மு.செல்லையா ஆசிரியர் அல்வாய் வடக்கு க.முருகேசு ஆசிரியர் அவர்களது தொடர்பும் ஆலோ சனைகளும் இவர்களுக்கு கிடைத்தது. மறுபுறத்தில் இளைஞனாயிருந்த ஆவரங்கால் தமிழரசு சின்னத்துரையின் ஆதரவினால் திரு. வன்னிய சிங்கம் பா.ஊவின் நெருக்கமும் ஏற்பட்டது. இவர்களனைவரதும் ஆலோ சனைப்படி அப்போது பல இந்துப்பாடசாலைகளை ஆரம்பித்து வெற்றி கரமாக செயற்பட்ட சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் ஆதரவை நாடினர். அவர்களது வழிகாட்டலில் பாடசாலை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் நடைபெற்றன. அதற்கான இடத்தெரிவு மேற்கொள்ளப்பட்டது. அந்த நேரத்தில் இளைஞர்களின் விளையாட்டிடமாக இருந்த தற்போது பாடசாலை அமைந்துள்ள இடம் பொருத்தமான இடமென யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பாடசாலை உருவாக்கத்துக்கான குழு ஒன்றும் கிராம மக்களிடையே இருந்து தெரிவு செய்யப்பட்டது. இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட சூழலுக்கு அண்மையாக சமூக மக்கள் பல கிராமங் களில் அதாவது சிறுப்பிட்டி, சொக்கதிடல், காளி யானை, சங்கடகலட்டி, மருதடி, தச்சங்கலட்டி, பாணர்கலட்டி, மந்திரமலை இடங்களில் செறிந்து வாழ்ந்தனர். ஆவரங்கால், புத்தகலட்டி, நவக்கிரி, கரதடி, என்றும் இக்கிரா மங்களிலிருந்தும் பல பிரதிநிதிகளைச் செயற்குழுவில் இணைத்து பாடசாலை ஆரம்ப வேலைகள் நடைபெற்றன.

அதன் தலைவராக அமரர் அவர்களே ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். ஏற்கனவே வாசிகசாலையின் தலைவராகவும் செயல்பட்டு வந்த அவர் இற்கும் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். காரியங்கள் வேகம் பெற்றன. தெரிவு செய்யப்பட்ட காணியை உறுதிப்படுத்த வேண்டிய நிலை. அந்தக் காணிக்குள் ஆட்சியையும் உரிமையையும் பெற்றிருந்த திரு.சி.வைரவன் (விசும்பன்) அவர்களை அணுகிய போது அவர் ஆட்சியையும் உரிமையையும் வழங்கியுதவ மனமுவந்து ஒப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். இதன் மூலம் இவர் தன் ஆயுள் முழுமையும் பாடசாலை அபிவிருத்திச்சங்க போஷகராக பேணப்பட்டார். இந்த வைரவன் அவர்கள் அமரரின் தாய்வழி மாமனும் பெண் கொடுத்தவருமாவார். இந்தப் பாடசாலையின் தலைமையாசிரியராக திரு.க.முருகேசு ஆசிரியர்கள் இருந்து செயற்படுமாறு நம்மூரவர்கள் கேட்டபோது அவரும் மன மகிழ்ந்து எம்முடன் சேர்ந்து பணியாற்ற தன்னையும் அர்ப்பணித்தார்கள். இப்போது இடமும் கிடைத்தாயிற்று. பணியாற்றத் தலைமையாசிரியரும் கிடைத்துவிட்டார். நிர்வாகத்துடன் முருகேசு ஆசிரியர், செல்லையா ஆசிரியர், இரத்தினம் அசிரியர், அவர்கள் சைவ வித்தியா விருத்திச்சங்க இராசரத்தினம் அவர்கள் பாராளுமன்ற உறுப்பி னரைச் சென்று சந்தித்து விண்ணப்பமும் கொடுத்தனர். இப்படியாக ஒருபுறத்தே இதை இல்லாமல் செய்வதற்கான முயற்சிகளும் அயல் பாடசாலைகளின் மட்டத்திலும் பெரும்பான்மைச் சமூக மட்டங்களினா லும் முடுக்கி விடப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர் சைவ வித்தியா விருத்திச் சங்கம், கல்வித் திணைக்களமென சகலருக்கும் புகார் கடிதங்கள் பறந்தன. காணிவிடயமாக உரிமை கோரிப்பலர் வழக்குத் தொடர்ந்தனர். இவை எல்லாவற்றையும் அமரர் வன்னியசிங்கத்தின் ஆதரவினால் எதிர்த்து முறியடித்தனர். இறுதியாக நல்லதொருநாளில் நாள் கப்பு போடப்பட்டு தற்காலிக கொட்டிலொன்று போடப்பட்டு பாடசாலை யின் ஆரம்ப வேலைகள் முடிவுற்றன. அப்போது க.பொ.த.ப.(சா/த) வரை பாடசாலையில் வகுப்புக்களை நடத்துவதென முடிவு செய்யப் பட்டது. 1957ம் ஆண்டு புரட்டாதி மாதம் விஜயதசமி அன்று பாடசாலை யில் சுமார் 18பிள்ளைகள் வரையில் பாலர் வகுப்பில் வித்தியாரம்பம் செய்து வைக்கப் பட்டனர். ஆண்டின் இறுதிப் பரீட்சைகள் நடைபெறவேண்டியிருந்ததினால் ஆரம் பத்தில் எல்லா வகுப்புக்களை யும் ஆரம்பிக்க முடியவில்லை. பாடசாலையில் முதலாவதாக அனுமதிக் கப்பட்டவர் சின்னத்தம்பி திவ்வியமலர் அவர்களே இதன் பின்னர் பெருமெடுப்பில் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டது. அச்சுவேலி தெற்கிலிருந்து சிறுப்பிட்டி வரையும் மேற்கே மந்திரிமலை மருதடி வரைக்கும் சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டத்தில் ஒன்றிணைந்து பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட பெருமை புத்தகலட்டி மக்களையே சாரும். அதன் மூலம் தலைமை வகித்து ஊண் உறக்கம் தவிர்த்து அல்லும் பகலும் அயராது உழைத்து முதன் முறையாக ஒரு சமூகத்தை ஒன்றிணைத்த பெருமையில் அமரருக்கும் பெரும் பங்குண்டு. ஆக மேற்குறிப்பிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த நலிவுற்ற சமூக மக்கள் அனைவரும் பெரும்பான்மைச் சமூகத்தினரின் நிர்வாகத்தின் கீழிருந்த பல பாடசாலைகளிலிருந்து விடுகை பெற்று பாடசாலையில் சேர முன்வந்தனர். இதற்கிடையில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைக்கு பெயர் வைக்குமுகமாக எல்லாப் பிரதேசமக்களும் அழைக்கப்பட்டு இரவு நேரக்கூட்டமொன்றுக்கு ஒழுங்கு செய்யப்பட்டது. அமரரின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்திற்கு கவிஞர்.மு.செல்லையா ஆசிரியர். திரு.க.இரத்தினம் ஆசிரியர் ஆகியோரும் அழைக்கப்பட்டிருந்தனர். பல பெயர்கள் பிரேரிக்கப்பட்டி ருந்தன. இறுதியாக எல்லாம் நிராகரிக்கப்பட்டு இரண்டு பெயர்கள் மாத்திரம் தக்கி நின்றன. முதலாவது ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம் எனும் பெயரை வைக்கவேண்டுமென அல்வை கவிஞர்.மு.செல்லையா அவர் கள் முன்மொழிந்தார். இரண்டாவதாக "சர்வோதய கலாமன்றம் என்ற பெயரை திரு.இ.நாராயணன் முன் மொழிந்தார். இரு பெயர்களும் பொருத்தமானதென உணர்ந்து கொண்ட சபையினர் திருவுளச் சீட்டின் மூலம் தேர்வு செய்ய முடிவு செய்தனர். இதன்படி இரு சீட்டுக்கள் எழுதப் பட்டு ஒரு செம்பிலிட்டனர். அதை எடுத்துக்கொடுத்தவர், அமரரின் மூத்த மகனாவார். அப்போது தலைமையாசிரியர் திரு.க.முருகேசு அவர்களிடம் கொடுக்கப்பட்ட சீட்டைப் பிரித்துப் பார்த்த போது அவராலும் விரும்பப்பட்ட ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் என்ற பெயரையே ஆண்டவரும் காட்டி நின்றார். ஆகவே மகிழ்ச்சியுடன் திரு.முருகேசு ஆசிரியர் அவர்களும் சபையினருக்கு அறிவித்த போது சபையின் கரவொலி வானைப்பிளந்தது. ஆக பெயர் வைக்கும் படலமும் ஒருவாறு முடிவுற்று 1958ம் ஆண்டு தைமாதம் முறைப்படி பாடசாலையும் சகல வகுப்புகளுடனும் ஆரம்பிக் கப்பட்டது. இப் பாடசாலையானது சகலரது முயற்சியினாலும் உதவி நன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடை பெறும் பாடசாலையாக கல்வித் திணைக்களத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆக கத்தியின்றி இரத்தமின்றி அமைதியாக ஒரு புரட்சி நிறைவேறியது. ஒரு நலிவுற்ற சமூக மக்களின் கல்வியுரிமை நிலை நாட்டப்பட்டது. இந்தப் பாடசாலையின் மூலம் திரு.வே.இளையகுட்டி ஆசிரியர் திரு.முருகுப்பிள்ளை ஆசிரியர் அவர்கள் தமது பாடசாலை சூழலிலிருந்து தெரிவாகி ஆசிரியராகப் பணிபுரிந்து தற்போது இளைப் பாறியுள்ளனர். இன்னும் பலர் வடமராட்சியிலிருந்தும் வந்து கடமையாற் றியுள்ளனர். இதையடுத்து இதற்கான நிரந்தரக் கட்டிடமொன்றைக் கட்டு வதற்கு முடிவானது. இந்தக் கட்டிடத்துக்காக தேவைப்பட்ட மனிதவலு அனைத்தும் சிரமதானம் மூலம் உதவப்பட்டது. இராமர் அணைகட்டப் பட்டபோது சிறு அணில் கூட அதற்கு உதவி செய்வதாக இதிகாச வரலாறுண்டு. இங்கு ஒரு இலட்சியப் பாடசாலையின் நிர்மாணத்தில் சிறுவரிலிருந்து முதியோர் வரைஆசிரியரில் இருந்து மாணவர் வரை அனைவரும் கரிசனையோடு ஈடுபட்டது இப்போதும் நினைத்துப் பெருமைப்பட வைக்கிறது. ஒரு முறை அமரர் கூறினார். இதற்காக பெறப் பட்ட கல்லுக்கூட ஊர்ஊராகச் சென்று பொறுக்கி சேகரித்ததென்று ஆம் பனைமரம் கற்கள் முதலிய (கடையில் வாங்கிய பொருட்கள் தவிர்ந்த) அனைத்தும் ஊர் மக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்டதே இப்படியாக சுமார்100 அடி நீளமும் 20அடி அகலமும் கொண்ட ஒரு உறுதியான கட்டிடமொன்று எமது பிரதேச மக்களின் ஒத்துழைப்புடன் அமைக்கப் பட்டது. இத்தனைக்கும் எதுவிதமான பிரச்சனைகளுமின்றி மக்களை ஒருங்கிணைந்து தலைமைதாங்கி நிறைவேற்றியவர் அமரர் அவர் களே. அப்போது இப்பாடசாலையை ஒவ்வொருவரும் தமது சொத்தாகவே கருதினர். இதனால் அதை நிர்வகிப்பதிலும் பேணிப் பாதுகாப்பதிலும் ஊர்மக்கள் அதிக கரிசனை காட்டினர். பாடசாலை தலைமை ஆசிரியர் திரு.க.முருகேசு அவர்களின் நிர்வாகத்தில் மிகத்திறமையாக செயல் பட்டது. பங்கு பற்றும் எந்தப் போட்டியிலும் சிறந்த பரிசுகள் வெல்லப் பட்டன. சமய விழாக்களென்ன கலை விழாக்களென்ன, விளையாட்டு விழாக்களென்ன பலவற்றாலும் கோப்பாய் வட்டத்தில் முதல் தரமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையாக விளங்கியது. பாடசாலையில் பல சமய விழாக்கள் நடைபெற்றன. விஷ்ணுஜெயந்தியை பல நூறு விளக்குகள் ஏற்றி சிறப்பாக நடாத்தப்பட்டு வந்தது. அமரர் அவர்கள் சுந்தரர் குருபூஜையை தனது மூத்தமகனின் கிரகபாவ நேர்த்திக்காக தனது உபயமாக எடுத்து ஊர் மக்களனைவரும் ஒன்று கூடி கொண்டாடு முகமாக அன்ன தான ஏற்பாடுகளுடன் செய்து வந்தார். ஏழு வருடங்களாக இக்குருபூசை அமரரின் உபயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இதற்கிடையில் புத்தகலட்டி வாசிகசாலையானது கலையகம் ச.ச.நிலையமாக 1950களின் இறுதியில் பெயர் மாற்றம் பெற்றது. அப் போது அதற்கென நிரந்தரக் கட்டிடமொன்றை அப்போதிருந்த தனியார் காணியில் அமைக்க முயற்சியொன்றை மேற்கொண்டனர். ஆனால் காணிச் சொந்தக்காரரின் எதிர்ப்பினால் கட்டிடம் அமைக்க முடியாமல் போனது இதனால் வெகுண்டெழுந்த அமரர் 1960ஆம் ஆண்டு ஆனி மாதம் தனது சொந்த நிலத்திலிருந்து 14குளி காணியை ச.ச.நிலையம் அமைப்பதற்காக நன்கொடையாக வழங்கினார். அந்த நேரத்தில் அனேகமான வீடுகளில் கிணறுகள் இல்லை அதற்காக பொதுக்கிணறு அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. பொதுக்கிணறு அமைப்பதற்காக அரசினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் அதை அமைப்பதற்குரிய காணி கிடைக்கவில்லை. இதற்காக அமரருடன் அமரர்கள் வ.ஐயாத் துரை, வீ.சின்னக்குட்டி என்போர் இணைந்து 4 குளி காணியை புத்தூர் கிராம சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. அப்போதும் அமரர் அவர்களே தலைவராக இருந்து காணி வழங்கினார். அப்போது செயலா ளராக இருந்து காணியைப்பொறுப்பேற்றவர், மணற்பகுதி அண்ணமார் கோவில் உபாசகரும் சிறந்த அண்ணாவியாராகவுமிருந்த காலஞ்சென்ற தே.வடிவேலு அவர்களே காணியை வழங்கும் போது நிலைய நன்மை கருதியும் ஒரு நிபந்தனையை முன் வைத்தார். “அந்நிபந்தனையாவது உறுதி முடித்த திகதியி லிருந்து மூன்று வருடங்களுக்குள் கட்டிடத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தி செய்ய வேண்டும் இன்றேல் காணியானது திரும்பவும் தனக்கே யுரித்தாகுமென நிபந்தனை நிபந்தனை விதித்தார்.

அப்போது ஒரு சிலர் வசதி படைத்தோராக இருந்த போதும் பெரும் பாலானவர்கள் கஷ்டத்திலே வாழ்ந்தனர். கட்டிடம் எப்பாடுபட்டே னும் கட்டி முடிக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பினாலே நிபந்தனை விதிக்கப்பட்டது.

ஆனாலும் அப்போதிருந்த பொருளாதார நிலையில் கட்டிட மானது 1/2 சுவர் எழுப்பிய நிலையில் பல வருடமாக இருந்தது. ஆனாலும் நிபந்தனையின் படி அமரர் அவர்கள் இதைத் தனதாக்க முயற்சிக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. அதன் பின்னர் இளை ஞர்கள் பலரின் முயற்சியினால் மீதிச்சுவர்கள் எழுப்பப்பட்டு கிடுகினால் வேயப்பட்டு இயங்கி வந்தது. 1965ம் ஆண்டு வாக்கில் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்துக்கு அரசினால் ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு கட்டிடம் அமைக்கப்பட்ட போது அதில் கிடைத்த இலாபத்தில் 500 ஓடுகளை எடுத்து கலையகம் ச.ச.நிலையத்துக்கு தலைமையாசிரியர் திரு.க.முரு கேசு அவர்கள் வழங்கி கட்டிட வேலை பூர்த்தியாக உதவினார். இவ்வித மாக ஊரின் நடப்புகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலையில் எம்ம வரின் உப உணவு பங்கீடுகள் கூப்பன் மூலம் ஆவரங்கால் சந்தைக் கட்டிடத்திலுள்ள ஐக்கிய பண்டகசாலையிலேயே பெறப்பட்டு வந்தன. ஆவரங்கால் மேற்கு - புத்தகலட்டி கணுக்கை அச்சுவேலி தெற்கின் ஒரு பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய எமது சமூக மக்களது பங்கீடுகள் எல்லாம் இச்சங்கமூடாகவே பெறப்பட்டு வந்தன. ஆனாலும் சமூக மக் களில் ஒருவரேனும் நிர்வாக அங்கம் வகிக்கவில்லை. இதனால் நம்ம வரின் உரிமைகள் மறுக்கப்பட்டு வந்தன. இந்த நிலையில் 1961ம் ஆண்டு சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்ட மொன்று நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு நமது மக்களின் பிரதிநிதிகளாக காலஞ்சென்றவர் களான திரு.ச.கந்தையா, திரு.தே.வடிவேலு ஆகியோர் சமூக மளித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தனர். வழமையான நிகழ்ச்சிகளின் பின்னர் நிர்வாக உத்தி யோகத்தர் தெரிவு இடம் பெற்றது. செயலாளர், தலைவர் முதலிய முக்கிய பதவிகள் நிரப்பப்பட்டு நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு நடைபெற்றது. தங்கள் இருவரில் ஒருவரையாவது தங்கள் சமூகப் பிரதிநிதியாக தெரிவு செய்வார்களென இருவரும் எதிர்பார்த் திருந்தனர். ஆனால் இத் தேவையை யாரும் உணர்ந்து கொண்டதாக தெரிந்திலர். திரு.ச. கந்தையா அவர்கள் நிர்வாக உறுப்பினர்களில் ஒருவராக பிரேரித்தார். அதையடுத்து சிறிது நேரம் நிசப்தம் நிலவியது. யாரும் இதை அனு மதித்து இத் தெரிவை நியாயப்படுத்த முன்வரவில்லை. அவமானத்தால் இருவரும் கூனிக்குறுகினர். பின்னர் இறுதி உறுப்பினராகவும் பெரும் பானயின நபரே தெரிவு செய்யப்பட்டார். இதன் பின்னர் கூட்டத்தை விட்டு வெளி நடப்புச் செய்த அவர்கள் அமரருடன் இதைப்பற்றி ஆலோசித்தனர். ஏற்கனவே பாடசாலை விடயத்தில் அவர்கள் பட்ட புறக்கணிப்பும் அதனால் வெற்றிகரமாக ஒரு பாடசாலையை ஸ்தாபித்து குறிக்கோளை எய்திய அனுபவத்தையும் மீண்டுமொருமுறை நினைத்துப் பார்த்தனர். இங்கேயும் கத்தியின்றி இரத்தமின்றி உரிமையும் சுய கௌரவத்தையும் நிலை நாட்ட துணிவு கொண்டனர். தங்களுக்கென ஒரு சங்கத்தை ஸ்தாபிக்க திடசங்கற்பம் கொண்டனர். மிகத் தீவிரமாக இயங்கத் தொடங் கினர். இது சம்பந்தமாக ஆராய கூடப்பட்ட ஒரு கூட்டத்திலேயே செயற் பாட்டுக் குழுவொன்று தெரிவு செய்யப்பட்டது. அதன் தலைவராக அமர ரும் செயலாளராக திரு.காலஞ்சென்ற ச.கந்தையா அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். அப்போது சைவப்பழமும் கூட்டுறவுத் தறையில் மிகுந்த பட்டறிவும் அதை விருத்தி செய்வதில் அக்கறையும் கொண்ட திரு.இராம நாதன் என்பவர் கூட்டுறவுப் பரிசோதகராக இருந்தார். அவருடன் இவர் கள் தங்கள் தேவை பற்றிக் கலந்துரையாடினர். அவர்மிக மகிழ்ச்சியுடன் இவர்களை வரவேற்று வேண்டிய ஆலோசனைகளை வழங்கினார். அதன்படி சங்கம் நிறுவ உத்தேசித்திருக்கும் சுற்றாடலின் மக்கள் செறிவு ஆகக் குறைந்த அங்கத்தவர்கள் தொகை, உலர் உணவு கூப்பன்களின் எண்ணிக்கை, விவசாயத்தின் தன்மையும் விவசாயிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கை, கட்ட வேண்டிய பங்குகளின் பெறுமதி முதலிய அடிப் படைத் தேவைகளையிட்டு அறிந்து கொண்டனர். இதன்படி முதலில் அங்கத்தவர்களைச் சேர்க்கத் தொடங்கினர். பலர் அங்கத்தவர்களாக சேரமுன்வந்தாலும் பங்குப்பணமாக 50ரூபாவைச் செலுத்த பலர் தயார கவில்லை. சிலரிடம் வசதியுமில்லை. இதனால் சங்க உப விதிப்படி வருடம் 10ரூபா படி 5வருடத்தில் பங்குப் பணத்தை செலுத்த முடிவானது. மொத்தம் 153அங்கத்தவர்கள் சேர்ந்த போதிலும் முழுப்பங்கும் செலுத் திய ஒரு சிலரும் பகுதிப்பங்குகளாக பலரும் சேர்ந்ததாக மொத்தமாக 22பேரே பங்குப் பணம் செலுத்தினர் மிகுதிப் பணத்தை அமரரும் உபதலைவராக இருந்த க.ஆறுமுகம் அவர்களுமே செலுத்த வேண்டி ஏற்பட்டது.

அப்போது இதன் அங்கத்தவர்களாக புத்தகலட்டிக் கிராமத்திலுள் ளோரே தமது கூப்பன்களை இதில் இணைக்க முன்வந்தனர். இதன் பயனாக முதலில் கூப்பன் கடையாக திரு.வ.ஐயாத்துரைக்கு சொந்தமான ஒரு ஓலைக் கொட்டிலில் கடை ஆரம்பிக்கப்பட்டது. அதன் முதலாவது முகாமையாளராக திரு.கனகசபை அவர்கள் பணியாற்றினார். இக்கடை யானது 04.04.1962ல் புத்தகலட்டி ப.நோ.கூ. சங்கமாக கூட்டுறவுத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது. அப்போது வங்கி வசதி களில்லை. அன்றன்றாடு நடைபெற்ற வியாபாரக் கணக்குகளெல்லாம் சிட்டைகளின் படி கணக்குப் பார்த்து தலைவரான அமரரே மிகுதிப் பணத்தை வீட்டுக்கு எடுத்துச் செல்வார். பின்னர் திங்கட்கிழமை முகாமையாளர் வந்து பணத்தைப் பெற்று சமாசத்தில் பொருட்களை கொள்வனவு செய்வார்.

அப்போது சங்கத்துக்கு வேண்டிய பொருட்களை சமாசத்தில் கொள் வனவு செய்த பின்பு பொருட்களை ஏற்றியிருக்க வாகனவசதிகள் ஏதுமில்லை அப்படி தேடிப்பிடிப்பதனாலும் பெரும் பணச் செலவு ஏற்படும் என நிர்வாகம் கருதியது ஆகவே பாரம்பரிய முறைப்படி மாட்டுவண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் ஏற்றியிறக்கும் வேலையை செய்யலாமெனக் கருதினார். இதனால் அந்த நேரத்தில் எமது கிராமத்தில் மாட்டு வண்டி சேவையில் இருவர் ஈடுபட்டிருந்தனர். அவர்களில் திரு.க.தவசி என்பவர் குறைந்த செலவில் அச்சேவையைச் செய்ய ஒப்புக் கொண்டதன் பேரில் நீண்ட காலமாக ஐந்து ரூபா ஆரம்பக்கட்டணத்தில் அச்சேவையைச் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுவே அன்றைய வியாபார நடைமுறை. இதன் ஆரம்பகால உறுப்பினர் களாக தலைவர் திரு.ி.அரியகுட்டி, செயலாளர் திரு.செ. கந்தையா , உபதலைவர் திரு.க.ஆறுமுகம், திரு.வ.ஐயாத்துரை, திரு.இ. நாராயணன், திரு.ச.கிருஷ்ணன், திரு.த.வைத்திலிங்கம், திரு.த.மாப் பனார், திரு.எ.வைரமுத்து ஆகியோர் அங்கம் வகித்தனர். சிறிது காலம் முகாமையாளராக கடமையாற்றிய வ.கனகசபை அவர்கள் பதவிவிலக முறையே திரு.வே.அப்புலிங்கம், திரு.இ.சிவஞானம், திரு.சி.திவ்விய மணி ஆகியோர் முகாமையாளராகப் பணியாற்றினார். சி.திவ்வியமணி அவர்கள் முகாமையாளராகப் இருந்தபோது கடையானது இரவு நேரம் தீப்பற்றி எரிந்தது. அப்போது ஊரவர்கள் விழித்தெழுந்து தீயை அணைத்த போது பத்திரங்கள் சிலவும் கூரையும் மட்டுமே எரிந்து சாம்பலானது. பெரும்பாலான பொருட்கள் மீட்கப்பட்டன. அடுத்தநாள் நிர்வாகம் கூடி ஆராய்ந்து கடையைத் திரும்பத் தொடங்கி நடாத்த முற்பட்டனர். ஆனாலும் கடைக்கட்டிடத்தை திரும்பவும் வாடகைக்கு கொடுக்க உரிமையாளர் மறுத்துவிட்டார். இத்தீயபாய நிகழ்வானது ஒரு சதிச்செயலாக இருக்கலாமென பலர் ஐயப்பட்டாலும் ஊரின் ஒற்றுமையும் நன்மையும் கருதி அதற்கு மேல் நடவடிக்கை எடுப்பதை நிர்வாகத்தினர் முயலவில்லை. மீண்டும் கட்டிடத்தை வழங்க உரிமையாளர் மறுத்த தினால் இதை வேறிடத்துக்கு மாற்ற முனைந்த போது வசதியான எந்த இடமும் இதற்கு கிடைக்கவில்லை. இதனால் கலையகம் ச.ச.நிலையக் கட்டிடத்தைப் பாவிக்கலாமெகத் தீர்மானிக்கப்பட்டது. இதன் படி முன்னைய கட்டிடத்தை விட்டு வெளியேற முற்பட்ட போது அதன் தளபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டங்களுக்குரிய பணத்தை வழங்குமாறு உரிமையாளர் கோரினார். இக் கோரிக்கையை ஏற்ற தலைவரான அமரர் தனது சொந்தப்பணத்திலி ருந்து 150ரூபாவைக் கொடுத்து அதை வாங்கி சங்கத்துக்கு வழங்கினார். இதன் பின்னர் ச.ச.நிலையக்கட்டிடத்துக்கு சங்கம் மாற்றப்பட்டது. ஆனாலும் முகாமையாளரில்லாமையால் கடையை நடாத்துவதில் சிரமத்தை எதிர் கொண்டனர். ஆகவே இயன்றவரை நிர்வாகத்தினரே கடையை நடாத்துவதென முடிவாகியது. இருந்தும் பலர் முன்வரா நிலை யிலும் சம்பளம் எதுவுமின்றி திரு.த.வைத்திலிங்கம் சில நாட்களும் அமர ரின் சார்பாக அவரது மகன் பல நாட்களும் சம்பளமின்றி வியாபாரத்தை நடாத்தினர். இதுவரை இடம் பெற்ற கடையின் வரலாற்றில் முதல் தடவை யாக இப்போது தான் சிறிது மேலதிக இலாபத்தை காணக்கூடியதாக இருந்தது.

இதன் பின் சொந்தக் கட்டிடமொன்றை அமைக்க நிர்வாகத்தினர் முயன்றனர். இது சம்பந்தமாக காணி தேடவும் ஆராயவும் குழு ஒன்று தெரிவு செய்யப் பட்டது. இக்குழுவினரின் தேடலில் சரியான இடமொன்று அகப்படவில்லை. ஆனாலும் இறுதியாக அமரரதும் திரு.ச.கந்தையா வினதும் வற்புறுத்தலுக் கிணங்கி திருமதி.கணபதி குழந்தை அவர்கள் தற்போதைய நிலத்தை அதற்குரிய பணத்தை பெற்றுக் கொண்டு வழங்க முன்வந்தார். 1964ம் ஆண்டு இதன்படி உறுதி எழுதப்பட்டு ஒரு கட்டிட மும் அமைக்கப்பட்டு அமரர் தலைவராக இருந்து அதைத் திறந்து வைத் தார். அப்போது புதிய கட்டிடத்தில் சங்கத்தின் முகாமையாளராக திரு.சி. அருந்தவம் அவர்கள் நியமிக்கப்பட்டார். இந்தச் சங்கமானது இவரது காலத்திலேயே முதன் முதலாக வெங்காயம் கொள்வனவு செய்து கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தினூடாக கொழும்புக்கு அனுப்பத்தொடங்கியது. வெங்காயமானது கொழும்புக்கு அனுப்பப்படும் நடைமுறையிலும் பல தடங்கல்கள் உணரப்பட்டது. கொள்வனவு செய்யப் பட்ட வெங்காயத்தைதுப்பரவாக்கி சிறு கூடுகளில் போட்டுபின்வெங்காயம் போடப்பட்ட கூடுகள் சாக்கிலிட்டே புகையிரதப் பெட்டிகள் மூலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த வெங்காயம் போடும் கூடுகள் கூட இந்தியாவிலிருந்து இருக்கு மதிசெய்யப்பட்டு சாங்கங்களினால் விலை கொடுத்து வாங்கப்பட்டு வந்தது. இதனால் எமது மக்களின் பொருளா தாரம் பாதிக்கப்பட்டது. அக் கூடுகளை பனை ஈர்க்கிலிருந்து செய்யலா மென கண்டு கொள்ளப்பட்டு கூடு பின்னும் வேலை சங்க எல்லைப் பரப்பில் குடிசைச்தொழிலானது இதன் மூலமாகவும் கூட்டில் வெங்காயம் நிரப்புவதனூடாகவும் பல பெண்களும் ஆண்களுமாக வேலை வாய்ப்பைப் பெற்றனர்.

இந்த நேரத்தில் வங்கியூடாகவே சங்கக் கொடுக்கல் வாங் கல்கள் நடைபெற்றன. சங்கத்தினால் எழுதப்பட்ட முதலாவது காசோலை திரு.க.பண்டாரியின் பெயரிலேயே எழுதப்பட்டு இதில் தலைவரான அமரரும் முகாமையாளரான அருந்தவமும் கையொப்பமிட்டிருந்தனர். இந்தக் காசோலை மாற்ற முடியாமல் திரும்பி விட்டது. இதனால் அங்கத்த வரிடையே சந்தேகம் நிலவியது முன்னர் காசோலையுடன் அதிகம் பரீட்சயம் இல்லாமல் இருந்த நம் மக்கள் காசோலை திரும்பியதும் கொடுக்கல் வாங்கல்களில் சந்தேகம் கொள்வது இயற்கையே. அதன் பின்னர் திரும்பிய காசோலை விடயமாக ஆராய்ந்த போது அது கசங்கி எழுத்து அழிந்ததினாலேயே திரும்பியதாக அறிந்தனர். திரும்பவும் புதிய காசோலையொன்று எழுதப்பட்டு வழங்கப்பட்டது. இது மாற்றப்பட்டு வந்த போது தான் வங்கி நடவடிக்கைகளில் மக்கள் நம்பிக்கை கொண்டனர் இப்படியாக முன்னர் புகையிச் செய்கையின் மூலம் கூட்டுறவுத்துறையில் அமரர் கொண்ட பற்றுதலையும் நயத்தையும் பின்னாளில் சகலரும் பெறும் பொருட்டு தனது தலைமையிலேயே முன்னின்று செயற்படுத்தி வெற்றி கொண்டார். ஒடுக்கப்பட்டு அடக்கப்பட்ட ஒரு சமூகத்தின் உரிமை மீண்டுமொரு முறை கத்தியின்றி இரத்த மின்றி நிலைநாட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கிடையில் 1965ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற தமிழரசுக் கட்சியினர் டட்லி சேனநாயக்காவை பிரதமராகக் கொண்டு அமைக்கப்பட்ட அரசாங்கத்தில் இணைந்து கொண்டனர். இதனால் உயர்திரு.மு.திருச்செல்வம் ஞ.ஊ அவர்கள் உள்ளூராட்சி அமைச்சராக நியமிக்கப்பட்டார். இவரைக் கௌரவிக்கும் முகமாக தமிழரசுக்கட்சியின் ஆவரங்கால் கிளையின் தலைவராக இருந்த திரு.க.சின்னத்துரை அவர்களின் வேண்டுகோளை ஏற்ற கட்சியினர் அனுமதியும் வழங்கினர். அப்போது அமரர் அவர்களே கிளையின் உபதலைவராக இருந்தார். இருவரும் சேர்ந்து விடாப்பிடியாக நின்று எமது ஊரிலேயே அதை நடாத்த வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். மிகப்பெரிய எடுப்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு புத்தூர் சிவன் கோவிலிலிருந்து மேளம் நாதஸ்வரம் சகிதம் அமைச்சரும் தந்தை செல்வா முதற் கொண்டு சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் அழைத்து வரப்பட்டு புத்தகலட்டி வடக்கிலுள்ள அமரரது தோட்டத்தில் அமைக்கப்பட்ட வன்னியசிங்கம் அரங்கில் வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தை அமரர் அவர்களே தலைமை வகித்து வழி நடத்தியமை குறிப்பிடத் தக்கது. அமைச்சருக்கு கலையகம் சன சமூக நிலையமானது தேனீர் விருந்தளித்து கௌரவித்தார்கள்.

அப்போது அமைச்சர் அவர்களிடம் சமூகத்தின் சார்பில் ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. புத்தூர் கிராம சபையின் வட்டாரங்களின் எல்லைகளை மீளாய்வு செய்யுமாறு விதந்துரைத்தார்கள். அதற்கு மிக முக்கியமான காரணமொன்று இருந்தது. புத்தூர் கிராம சபையில் 12வட்டாரங்களே அப்போதிருந்தன. அவற்றின் மூலம் 12 உறுப்பினர்கள் கிராமசபைக்குத் தெரிவானார்கள். இந்தக் கிராம சபையின் நிர்வாகப் பரப்புக்குள் சுமார் 1/3 பங்கினர் நலிவுற்ற சமூக மக்களாகவே இருந்தனர். முன்னைய எல்லை நிர்ணயத்தின் படி ஒருவரே இச்சமூகத்திலிருந்து தெரிவாகி கிராமசபையின் உறுப்பினரானார். அவரே ஆவரங்கால் மேற்கைச் சேர்ந்த இராசன் ஆவார். உறுப்பினராகிச் சென்றாலும் கிராம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையின் கூட்டங்களில் பங்கு பற்ற இவருக்கு ஆசன மேதும் போடாமல் பெரும்பான்மையின் உறுப்பினர்கள் சிலர் தவிர்ந்து வந்தனர். இதனால் பல கூட்டங்களுக்கு அவர் சமூகமளிக்காது தவிர்த்து வந்தார்.

இப்படியான ஒதுக்கல்களிலிருந்து விடுபடும் நோக்கமாகவும் 1/3 பங்கு மக்களின் உரிமைகளை நிலைநிறுத்து முகமாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை கௌரவ அமைச்சருக்கு உணரவைக்கப் பட்டது. ஆகவே எல்லோரையும் அரவணைத்து சமமாக கருதிச் செயற் பட்டு வரும் தமிழரசுக் கட்சியின் அமைச்சரான திரு.மு.திருச்செல்வம் கு.ஊ அவர்கள் சமயம் வரும் போது செய்து தருவதாக வாக்குறுதி அளித்தார். இதற்கமைவாக இலங்கை முழுவதிலுமுள்ள உள்ளூராட்சி வட்டார எல்லைகள் மீளாய்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்காக அமைக்கப்பட்ட மீளாய்வுக் குழுவுக்கு சமூக மட்ட தலைவர் களினால் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக 1967ம் ஆண்டு புத்தூர் கிராமசபை 17வட்டாரங்களாக வகுக்கப்பட்டது. இந்த மீளமைப் பில் ஆவரங்கால் வட்டார உறுப்பினராகவிருந்த திரு.க.சின்னத்துரை அவர்களின் பங்கு அளப்பரியது. இந்த வட்டார மீளமைப்பு நடைமுறையி னால் நலிவுற்ற சமூகம் ஒற்றுமையாக செயற்படுவதன் மூலம் 7பேரை உறுப்பினராக பெறக்கூடிய வசதி தமிழரசுக் கட்சியினால் செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து 1968ம் ஆண்டு ஆனிமாதம் 18ம் நாள் உள்ளூராட்சித் தேர்தலென வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. இதில் நமது வட்டாரமான 9ம் வட்டாரத்திலிருந்து போட்டியின்றி ஒரு வரைப்பிரதிநிதியாக அனுப்பும் முகமாக ஶ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தில் ஒரு கூட்டத்துக்கு ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது. இக்கூட்டத்துக்கு அனேக மாக வட்டாரத்திலுள்ள மக்கள் அனைவரும் சமூகமளித்திருந்தனர். இதில் பலர் உரையாற்றிய பின்னர் அமரர் அவர்களையே ஏகமனதாக உறுப்பினராக அனுப்பவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. வேறு பிரேரணைகள் இன்மையால் அமரர் அவர்களே 9ம் வட்டாரத்துக்கான பிரதிநிதியாக அறிவிக்கப்பட்டார். இதன் பின்னர் உரிய நாளில் வேட்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுவும் தாக்கல் செயற்பட்டது. இந்த நிலையில் புத்தூர் கிராமசபைத் தலைவராக இருந்த தம்பி நடராசா அவர்கள் எமது ஒற்றுமைச் சக்தியைக் குலைத்து ஊரின் கௌரவத்தைக் கெடுக்க திரைமறைவில் செய்த சதிக்கு உட்பட்டு சிலர் 2வது வேட்பு மனுவையும் தாக்கல் செய்தனர். இதனால் நான்முனைப் போட்டி ஏற்பட்டது. இதனால் அமரரின் மிக நெருக்கமான உறவினர்கள் சிலர் சதிக்கு உட்பட்டு அமரருக்கு எதிராக செயற்பட்ட போதும் திரு.ச.கந்தையா(அமரர்) திரு.இ.சிவஞானம், திரு.த. குணரத்தினம், திரு.வே.செல்லத்தம்பி, திரு.அ.பொன்னுத்துரை (சிமோல்), திரு.ப.கந்தசாமி (அமரர்) ஆகியோர் தீரமுடன் செயற்பட்டு அமரரின் வெற்றிக்காக உழைத்தனர். இதன் பயனாக அமரர் அவர்கள் போட்டியில் வெற்றியீட்டினர். மேற்படி வெற்றிக்கு மேற்குறிப்பிட்டவர்கள் ஆற்றிய தொண்டையிட்டு அமரர் அவர்கள் தன் இறுதிக் காலம் வரை நன்றியுடையவராக நினைவு கூர்ந்தார்.

இதே மாதிரியாக மற்றைய 5வட்டாரங்களிலும் போட்டி நிலவிய தினால் எம் மக்கள் இரண்டு வட்டாரங்களில் தமது பிரதிநிதியை இழந் தனர். இதன் காரணமாக எதிர் வரும் போட்டி காலங்களில் போட்டி வருமெனக் கருதும் போதெல்லாம் போட்டியில் நிற்பதில்லையென அமரர் கருதித் தீர்மானமும் எடுத்துக் கெண்டார். தெரிவு செய்யப்பட்ட எம்மவர் நால் வரையும் வைத்து அமரர் அவர்கள் ஒருபேரம்பேச முற்பட்டார். அப்போது தழிழரசுக்கட்சி ஆதரவில் 6பேரும் தமிழ் காங்கிரஸ் சார்பில் 7பேரும் தெரிவாகியிருந்தனர். சிறுபான்மையினர் நால்வரும் எதுக்கு ஆதரவளிக்கிறார்களோ அவர்களே அதிகாரத்துக்கு வரக்கூடிய நிலை. இந்த நிலையில் மற்றைய மூவரையும் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்கு மாறும் அப்படி வாக்களித்தால் அவர்களிலொருவருக்கு உபதலைவர் வழங்க முடியுமெனவும் இதன் மூலம் எமது பலத்தையும் ஒற்றுமையை யும் நிலைநாட்டலாமெனவும் கேட்டுக்கொண்டார். இல்லா விட்டால் தானும் தமிழ் காங்கிரசை ஆதரிப்பதாகவும் உங்களிலொருவர் உப தலைவர் பதவியொன்றைக் கேட்டுப்பெறலாமே எனவும் ஆலோசனை கூறினார்.

அவர்களும் தமிழ்க் காங்கிரஸ் அந்தப் பெருமையை செய்யா தெனக்கருதி தமிழரசுக் கட்சிக்கு ஆதரவளிக்க முன் வந்தனர் இதை எப்படியோ அறிந்து கொண்ட தமிழ்க் காங்கிரஸ் குழுவுக்கு தலைமை தாங்கிய தம்பி-நடராசாவும் தலைவர் தேர்வுக்கு முதல் நாளே மூவரை யும் கடத்திவிட்டார். இதனால் தேர்விலன்று அமரரே திரு.தம்பிநடராசா அவர்களை தலைவராகப் பிரேரித்து தெரிவுகளைப் போட்டியின்றி நடக்க ஏற்பாடு செய்து விட்டார். இதன் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி யின் இரு கட்சிகளும் இணைகிற நிலையில் திரு.தம்பி நடராசா அவர் களும் காலமாகிவிட்டார். பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியாக ஒருமித்து செயற்பட்ட போது திரு.மு.திருநாவுக்கரசு அவர்கள் தலை வராக தெரிவு செய்யப்பட்டு ஒற்றுமையாக கூட்டங்கள் நடைபெற்றன. இச்சபையின் இறுதிக்காலக் கட்டத்தில் அமரர் அவர்கள் உபதலைவராக தெரிவு செய்யப்பட்டு ஒற்றுமையாக கூட்டங்கள் நடைபெற்றன. அப்பத விக் காலத்தில் பதவி வழி சமாதான நீதிவானாகவும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அந்தக் காலத்தில் உள்ளூராட்சிச் சபையின் தலை வர் ஆயுள்கால சமாதான நீதிவானாகவும் உபதலைவர் அப்பதவிக் காலத்தில் மட்டும் சமாதான நீதிவானாகவும் பதவி வகிப்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் காலகட்டத்தில் அமரர் அவர்கள் ஆவரங்கால் கிராம முன்றேனற்றச் சங்கத்தின் உப தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். இக் கிராம முன்னேற்றச் சங்கமானது. ஆவரங்கால், நவக்கிரியின் ஒரு பகுதி ஆகியவற்றை உள்ளடக்கி ஒரே யொரு சங்கமாக செயற்பட்டு வந்தது. இதன் தலைவராக திரு.க.சின்னத்துரை அவர்கள் அப்பொழுது கடமையாற்றியது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து 70ம் ஆண்டின் நிறுவப்பட்ட ஸ்ரீமாவோ பண்டார நாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைவாக பனை தென்னை சார் கைத்தொழில்களை கூட்டுறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையின் கீழ் கொண்டுவர அப்போதைய நிதியமைச்சரான கௌரவ டே.ஆ.பெரேரா அவர்கள் நடவடிக்கை எடுத்திருந்தார்கள். இதன் பயனாக உருவானதே தற்போது அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கமென அழைக்கப்படும் நிறுவனம் இது நிறுவப்பட்ட போது அதன் ஆரம்பகால இயக்குனர் சபைக்கு அப்போது கோப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சிந்தனைச்சிற்பி திரு.சி. கதிரவேலுப் பிள்ளை அவர்களினால் அமரர் அவர்கள் சிபார்சுசெய்யப்பட்டு நியமிக்கப்பட்டார்.

இவர் அப்போதும் தமிழரசுக் கட்சியின் ஆவரங்கால் கிளையின் உபதலைவராக இருந்து கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டதுடன் பாராளுமன்ற உறுப்பினரின் நெருங்கிய சகாவாகவும் இருந்தார். மேற்படி கூட்டுறவுச் சங்கத்தில் உப தலைவராக இருந்து அதன் வளர்ச்சிக் காகத் தான் முன்னர் கூட்டுறவுச்சங்க ஸ்தாபிதத்தில் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பயன்படுத்தி முன்னின்றுழைத்தார். அதன் மூலம் சிலர் சங்கத்தில் வேலை வாய்ப்புப் பெறவும், அதன் அங்கத்தவர்களுக்கு தொழில் மூலம் அதிக வருவாய் பெறவும் வழிவகை செய்தார்.

1970ம் ஆண்டின் பிற்பகுதியில் பௌத்த சமயத்தையும் சிங்களத்தையும் நலிவுற்ற சமூக மக்கள் மத்தியில் திணிப்பதன் நோக் கமாக அம்மக்கள் செறிந்து வாழும் இடங்களில் பௌத்த பாடசாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காக யாழ்ப்பாணத்தில் தமிழ் பௌத்த காங்கிரஸ் என அமைப்பு உருவாக்கப் பட்டது. இதன் உயர்பதவி களில் நலிவுற்ற சமுதாய மக்கள் அங்கம் வகித்தனர். இவர்கள் மூலமாக பலருக்கு ஆசிரிய வேலை கிடைக்குமென நம்பிக்கையூட்டி யாழ் மாவட்டத்தில் பல பௌத்த சிங்களப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டது. இதில் ஆசிரியராகவும் மாணவர்களாகவும் 100வீதம் நலிவுற்ற சமூக மக்களே உள்வாங்கப்பட்டனர். இந்த திணிப்பானது தமிழ்த்தேசிய மட்டத் திலே அதிர் வலைகளை ஏற்படுத்தின. இந்தப் பாடசாலைகள் அல்வாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரவெட்டி, அச்சுவேலி, புத்தூர், சொக்கத்திடல் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன. புத்தூர் பகுதியின் நலிவுற்ற மாணவர்களை பௌத்த கலாச்சாரத்திலிருந்து மீட்பதற்காக திரு.தாமு.கந்தையா என்பவரின் காணியில் (இவர் வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலைக்கு உள்ளா னவர்) அவரது தலைமையில் தமிழரசுக்கட்சியினால் ஒரு பாடசாலை நிறுவப்பட்டது. தமிழ்த்தேசிய போராட்ட வரலாற்றில் இதுவொரு முக்கிய புள்ளியாக கருதப்பட்டது. அப்போது இப்பாடசாலையின் உருவாக்கத்தில் புத்தூர் கிராமசபையின் உறுப்பினராகவிருந்த அமரர் அரியகுட்டியின் பங்கு அளப்பரியது.

இதில் ஆவரங்கால் திரு.க.நாகேந்திரம் அவர்களும் மணற் பகுதி திருமதி.பூ. கமலாதேவி அவர்களும் ஆசிரியராக எதுவித வேதன மும் இன்றி கடமையாற்றி வந்தனர். பின்னாளில் இப்பாடசாலையின் தேவைகள் நிறைவேறியதன் பின்னர். திரு.க.நாகேந்திரம் அவர்கள் விசேட சேவை உத்தியோகத்தராக பாராளுமன்ற உறுப்பினரால் சிபார்சு செய்யப்பட்டார். திருமதி.கமலாதேவி வேலை எதுவு மின்றியிருந்தார். இந்த நிலையில் அமரர் அங்கம் வகித்த புத்தூர் கிராம சபையின் நிர்வாகத்தில் ஒரு பாலர் பாடசாலை அமைக்க உள்ளூராட்சித் திணைக் களத்தின் அமைதி கிடைத்திருந்தது. அதன் ஆசிரியையாக பெரும் பான்மையினத்தவர் ஒருவரை நியமிக்க பல உறுப்பினர்கள் முயற்சி களைச் செய்து வந்தனர். ஆனால் அமரர்.அவர்கள் திரு.க.சின்னத்துரை (தமிழரசு) அவர்களின் உதவியோடு கட்சியின் உயர் மட்டம் வரை சென்று சட்டமறுப்பு பாடசாலையின் கற்பித்தல் செயற்பாட்டில் ஆதாரமாக இருந்த திருமதி.பூ.கமலாதேவி அதன் ஆசிரியராக நியமனம் பெற உறுதுணையாக இருந்தார்.

இதற்கிடையில் 1970ம் ஆண்டில் எமது ஊரில் பல அரச கட்டுப் பாடு நிறுவனங்களும் பொது நிறுவனங்களும் அமைக்கப்பட்டு நடாத்தப் பட்டு வந்தன. இவற்றிலிருந்து வேறிடங்களுக்கு கடிதங்கள் அனுப்புவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் புத்தூர் தபால் கந்தோரிலேயே தபாலிட வேண்டும். இந்நிலை யினைப் போக்குவதற்காக ஒரு தபால் பெட்டியை இப்பிரதேசத்தில் நிறு வும் நோக்கமாக ஒரு கடிதம் எமது கலையகம் தபால்திணைக்களத்துக்கு எழுதப்பட்டிருந்தது. இதற்கு தபால்திணைக்களமும் நடவடிக்கை மேற் கொண்டு புத்தகலட்டிப் பிரதேசத்தில் வைக்கவென ஒரு தபால்ப் பெட்டியை புத்தூர் உபதபாலகத்துக்கு அனுப்பியிருந்தது அப்போது புத்த கலட்டி கலையகம் சனசமூக நிலையம் என்றே எமது நிலையம் பதிவு செய்யப்பட்டிருந்தது. இதனாலேயே தபால்பெட்டியிலும் புத்தகலட்டி என்ற பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனால் அப்போது கிராமசபையின் தலைவர் திரு.தம்பி நடராசா அவர்களது வீட்டின் முன்னாலேயே புத்தூர் உபதபாலகமும் இருந்தது. இதனால் அப்போது கிராமசபையின் தலைவர் திரு.தம்பி நடராசா அவர்களும் தனது செல்வாக்கினால் அதை எடுத்துக் கொண்டு வந்து புத்தகலட்டி தெற்கிலுள்ள ஒரு இடத்தில் வைத்தார். அதன் பின்பே தபால்பெட்டி வந்த விடயம் சகலருக்கும் தெரியவந்தது. இதன் பின் இவ்விடயம் இருபகுதி மக்களிடையேயும் ஒரு கௌரவப் பிரச்சினையாக உணர்ச்சிகரமான கொந்தளிப்பு நிலையை ஏற்படுத்தியது. ஆகவே வேண்டத்தகாத நிகழ்வுகள் ஏற்படுவதைத் தடுக்கும் முகமாக அமரர் அவர்கள் இப்பிரச்சனையை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.சி. கதிரவேற் பிள்ளை அவர்களிடம் கொண்டு சென்றார். அவர் உடனடியாக இதில் தலையிட்டு திரு.தம்பி நடராசா அவர்களையும் அழைத்து நிலைமையை ஆராய்ந்தார். இதில் தம்பி நடராசா அவர்களே சுயநல நோக்கோடு தன் பதவிக்கு அப்பால் பட்ட விதத்தில் நடந்து கொண்டதாக பாராளுமன்ற உறுப்பினரும் கருதினார். இருந்தாலும் கி.ச.தலைவரும் மக்கள் பிரதிநிதியாக இருந்ததினாலும் ஏற்கனவே ஓரிடத்தில் தபால் பெட்டியும் வைக்கப்பட்டதனால் அதை அப்புறப்படுத்துவது அவ்விட மக் களின் சுய கௌரவத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துமென்று மூவரும் கருதியதாலும் உடனடியாக அப்பெட்டியை அவ்விடத்திலிருந்து அகற்றுவ தில்லையென முடிவு செய்தனர். இருந்தாலும் காலப்போக்கில் அதை இரு குறிச்சிக்கும் பொதுவான ஓரிடத்தில் சீமெந்து கொண்டு நிறுவுவதெனவும்

மூவரும் ஒப்புக் கொண்டனர். இம்முடிவை அப்போது சகலரும் ஏற்றுக் கொண்டனர். இதனால் இரண்டு குறிச்சிக்கும் (கிராமசபையின் 1ம் 9ம் வட்டாரங்கள்) இடையே ஒரு சுமுக நிலை ஏற்பட அமரர் வழிகோலினார். இதன் பின்புதான் பலவித ஒற்றுமையான செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்த இந்த "புத்த கலட்டி" என்ற பெயர் பிரயோகத்தை மாற்ற வேண்டிய தேவை கலையகம் சனசமூக நிலைய நிர்வாகப் பரப்புக்கு ஏற்பட்டது. இதன்படியே எல்லோரது ஏகோபித்த முடிவின் படி ஊரின் ஒரு காணிக்கு பெயராக இருந்த அயற்கிராம மக்களின் நன்மதிப்பைப்பெற்ற மணற் பகுதி என்ற பெயர் எமது கிராமத்துக்கு வழங் கப்படலாயிற்று. ஆகவே இந்த சம்பவத்திலிருந்து தான் மணற்பகுதி என்ற பெயர் வழக்கில் இருந்து வருகின்றது ஈண்டு குறிப்பிடக்கூடியது.

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாமென ஆன்றோர் கூற் றொன்றுன்று. அதைத்தான் "திருக்கோவிலில்லாத திருவிலூரும் திருவெண்ணீ றணியாத திருவிலூரும் ........ அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே" என நாவுக் கரசரும் பாடி வைத்தார். நீண்டகாலமாக எமது ஊரில் அண்ணாமார கோவிலென அண்ணாமாரைத் தெய்வமாகக் கொண்டு ஒரு சிறு கொட்டகையில் வழிபட்டு வந்தனர்.

அந்தக் காலத்தில் பல வழிபாட்டு முறைகள் இருந்து வந்தன. அவை சமூக ரீதியான பல கட்டுப்பாடுகளை ஏற்று நடக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டிருந்தன. ஒவ்வொரு சமூகக் குழுக்களும் வழிபடுவதற்கேற்ற வழிபாடுகள் அமைந்தன. சமூக ரீதியாக நம்மவர் அண்ணமாரைக் குலதெய்வமாக வழிபடும் வழக்கு அன்று காணப் பட்டது. அந்த வகையில் உருவவழிபாடன்றி சூலத்தை பிரதிஷ்டை செய்து எமது புராணங்களில் கூறப்பட்ட வேள்வி என்ற பேரில் மிருக பலிகள் நடைபெற்று வந்தன. இதன் போது பொங்கலிட்டு மடைபரப்பி ஆடு, கோழி களை பலியிட்டு தமது நேர்த்திகளைச் செய்து வந்தனர். அதிலே பிரதான பொங்கலுக்காக பூசகர் வழுந்து ஏந்தி ஆடிப்பாடுவார். வழுந்து என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொங் கலுக்காக பாவிக்கப்படும் பெரிய மண்பானையைக் குறிக்கும் பூசகர் ஆடிப்பாடும் போது உடுக்கு, பம்பை, பறை மேளம், சங்கு முதலியவற்றின் ஓசை காதைப் பிளக்கும் இந்தப் பூசையின் போது பலவித பலகாரங்கள் செய்து சுவாமிக்குப் படைப்பார்கள். இதை மடை பரவுதல் எனக் கொள்வார்கள். அனேகமாக இந்த வேள்விகள் மாரிகால பயிர்ச் செய்கையின் பலன்களைப் பெற்ற பின் பங்குனி மாதத்தின் பின்வரும் கோடை காலத்திலே வேள்விகள் நடைபெறுவது வழக்கமாகும். இந்த நேரத்தைத் தேர்ந்தெடுக்கப் பல காரணங்கள் இருந்தன. கோடையில் பல நோய்களுக்கு ஆட்படுதல் சர்வ சாதாரணமாயிருந்தது. இந்த நோய்களை தாங்கள் செய்த பாவங்களுக்கு தெய்வம் கொடுக்கும் தண்டனைகளா கவே கருதினர். அதனால் ஆக்ரோஷ தெய்வங்களை குளிரவைக்கும் நோக் கமாகவே இத்தகைய வேள்விகள் அன்று கருதப்பட்டன. அத்துடன் இந்தக் காலத்தை தெரிவு செய்ய இன்னும் சில காரணங்கள் இருந்தன. பெரும்பாலும் விவசாயிகளான இவர்களின் பயிர் அறுவடைமுடிந்து அப்போது தான் ஓய்வாகவும் ஓரளவு பொருளாதார வசதிகளோடும் இவர்கள் காணப்பட்டார்கள். இந்த வேளைகளில் ஊரேதிரண்டிருந்து ஆடிப்பாடி மகிழ்வதும் பலவித பாரம்பரிய விளையாட்டுக்களில் ஈடுபடுவ தும் கண்கொள்ளாக்காட்சியாகும். கால போக்கில் மனித நாகரிக மேம் பாட்டினாலும் காருண்ய அடிப்படையிலும் கிராமத்தில் மிருகபலி நிறுத்தப் பட்டாலும் நீண்டகாலமாக மடைபரப்பி பொங்விட்டு வேள்விகள் நடை பெற்றே வந்தன. மிருகபலிக்கு மாறாக கோவிலுக்கு வரும் கோழிகள் மஞ்சள் தெளித்து ஆசீர்வதித்து அனுப்பப்பட்டான். இந்த நடைமுறைகள் படிப்படியாக அருகிவந்தன. அதன் பின்னர் வெள்ளிக்கிழமைகளில் விளக்கு வைத்ததோடு வருடத்தில் ஒரு தடவை விசேட மடை வைக்கப் பட்டு பொங்கலும் படைத்து வழிபட்டு வந்தனர் நம் முன்னோர் காலப் போக்கில் இக் கோவில் அதிகம் பராமரிக்கப்படவில்லை. ஆனால் திரு.தே.வடிவேல் அவர்களினால் வெள்ளிக் கிழமைகளில் விளக்கேற்றப் படுவதோடு புதுவருடம், தைப் பொங்கல் தினங்களிலும் மக்களினால் விசேட பொங்கல் வழிபாடுகளும் செய்யப்பட்டு வந்தது. அண்ணமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது சிவனது அவதாரங்களில் ஒன்றெனவும் புராணங்கள் கூறினாலும் அதை ஒரு நலிவுற்ற சமூகத்தின் தெய்வமாக ஆச்சாரியார்கள் வரையறுத்து விட்டனர். இதனால் இவருக்கு பூசை புனஸ்காரங்கள் கிடையாது. விளக்கு வைப்பு வேள்வி, மடை பொங்கல் என இவரை வழிபடும் முறைகள் மரபு ரீதியாகவே சில வழக்கிலிருந்தன. இதனாலேயே முற்போக்கு சிந்தனையுள்ள நம்மவரால் இதை ஆதரிக்க பலர் முன்வரவில்லை. ஆனாலும் பாடசாலை நடைபெறும் காலங்களில் காலையில் இக்கோயிலில் வழிபாடுகள் நடாத்தியே அப்போதைய தலைமையாசிரியர் திரு.க.முருகேசு அவர்கள் பாடசாலை நடவடிக்கைகளைத் தொடக்கி வைப்பார். இதனால் பாடசாலைக்கு இக் கோவிலானது ஒரு அத்தியாவசிய தேவையாகவே கருதப்பட்டது. இதனால் பாடசாலை கட்டிய போது எஞ்சிய கட்டிடப்பொருட்களினால் இந்தக் கோவில் அமைந்த இடத்திற்கு வடக்குப்புறமாக தற்போதைய கோவில் அமைந்துள்ள இடத்தில் அத்திவாரமிடப்பட்டு சுவரும் சிறிதாக எழுதப்பட்டிருந்தது. ஆனாலும் வழிபாடுகள் கொட்டிலிலுள்ள சூலலிங்கத்துக்கே நடாத்தப்பட்டு வந்தது. மக்கள் இந்நிலை கண்டும் வாழாவிருந்தனர். அப்போது பாடசாலையில் பொ.ஐயம்பிள்ளை என்றொரு ஆசிரியரும் கற்பித்து வந்தார். இவரது மனைவியும் ஓர் ஆசிரியையே அவரும் இப்பாடசாலையிலேயே பணியாற்றினார். கணவர் இந்து, மனைவி கத்தோலிக்கம் இருந்தாலும் ஆசிரியர் முற்போக்கான சிந்தனையுடைய வரானபடியால் மதம் சம்பந்தமான விடயங்களில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதில்லை. அவரும் நலிவுற்ற சமூகத்தின் ஒரு பிரிவினராதலால் எமது ஊர் முன்னேற்றத்தில் ஒரு பங்காளியாக அவாவினார். நம்மூரவதும் பாடசாலை நிர்வாகத் தினதும் ஒத்துழைப்பினாலும் ஒருவருக்கொருவர் கலந்துரையாடினாலும் எமது மணற்பகுதி வட்டகைக்கென ஒரு கோவில் வேண்டுமென உணரப்பட்டது. இதன் பொருட்டு ஒரு திருப்பணிக் குழுவைத் தெரிவு செய்யுமுகமாக ஒரு நாள் இரவு நடைபெற்ற கூட்டத்தில் அமரர் திருப்பணிக்குழுவின் தலைவராகவும் தலைமையாசிரியர் திரு.க.முருகேசு அவர்கள் செயலாளராகவும் திரு.பொ.ஐயம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 12பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் இவர்களுக்கு உதவியாக தெரிவு செய்யப் பட்டனர். அமரரின் தலைமையில் திருப்பணி மிகவேகமாக நடை பெற்றது. கட்டிடம் ஓரளவு பூர்த்தியாகிய நிலையில் சமூக அடிப்படையில் வழிபாட்டுக்கென வகுக்கப்பட்ட அண்ணமார் மூலவரை விடுத்து வேறு எமக்குப் பொருத்தமான மூலவரை வைத்து வழிபட வேண்டுமென ஊர்மக்கள் விரும்பினர். அதற்காகப் பல சோதிடர்களையும் சிவாச் சாரியார்களையும் அணுகி ஆலோசனை கேட்டபோது அதன் இருப்பிடம் ஆதரிப்போர் தொகை சமூகப்பழக்கவழக்கங்கள், பொருளாதார நிலை முதலிய இன்னோரன்ன விடயங்களை ஆராய்ந்த அவர்கள் ஈற்றில் ஸ்ரீ புவனேஸ்வரியை மூலவராக வைத்து வழிபட்டால் சகல ஐஸ்வரியங் களும் பெருகி துன்பம் நீங்கி ஊர் செழிப்புறும் என விளம்பினர். இதன்படி ஐம்பொன் கொண்டு தகுந்த ஆசாரியார் மூலம் மூலவர் உருவாக்கப்பட்டு கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டு 1972ம் ஆண்டு ஆனிமாதம் உத்தர நட்சத்திரத்தில் கோவில் கும்பாபிஷேகம் நடாத்தி வைத்ததிலிருந்து திரு.பொன்னுத்துரைக்குருக்கள் அவர்களே மிக நீண்டகாலமாக குருக் களாக இருந்து நித்தியபூசை நைமித்தியங்களைச் செய்து வந்தார்.

கும்பாபிஷேகத்தின் பின்னர் நாளாந்த பூசைகள் தடையின்றி நடைபெறும் பொருட்டு வருடாந்தம் நடைபெறக் கூடிய உற்சவங்களை முறைப்படி செய்ய வேண்டியிருந்ததினாலும் வருடாந்தம் நடைபெறும் உற்சவங்கள்10ஆக இருக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. அதற் கமைவாக அண்ணமார் கோவிலாக இருந்த போது அதை ஆதரித்து வந்த உரிமைகளுக்கு அமைவாக நெருங்கிய உறவினர்கள் குறிச்சிகள் அவர்களின் எண்ணிக்கை அவர்களோடு இணைந்து பரிமாற்றக்கூடிய குடும்பங்கள் எல்லோரையும் இணைத்து செயற்படக்கூடிய தலைமை என்ற வகையில் 10தலைமைகள் இனங்காணப்பட்டன. இந்த தலைமை களிடையே குலுக்கல் முறையில் ஒவ்வொரு திருவிழாவுக்குமான உபயகாரர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அந்தவகையிலே முதலாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபயகாரர்கள் திரு.வ. ஜயாத்துரை தலைமையிலும் 2வது உபயகாரர் கள் திரு.சி.அரியகுட்டி தலைமையிலும் 3வது உபயகாரராக திரு.த. வைத்திலிங்கம் தலைமையிலும் 4வது உபயகாரராக திரு.க.ஆறுமுகம் தலைமையிலும் 5வது உபயகாரர்கள் திரு.ச.கிருஷ்ணன் தலைமை யிலும் 6வது உபயகாரர்கள் திரு.க.பண்டாரி அவர்கள் தலைமையிலும் 7வது உபயகாரர்கள் திரு.கி.சின்னத்தம்பி அவர்கள் தலைமையிலும் 8வது உபயகாரர்கள் திரு.வே.மாசிலாமணி தலைமையிலும் 9வது உபயகாரர்கள் திரு.ப.மணியம் தலைமையிலும் 10வது உபயகாரர்கள் திரு.க.இளையதம்பி தலைமையிலும் இருக்கக்கூடியதாக பிரிக்கப்பட்டு பொதுக்கூட்டத்தில் அனுமதி பெறப்பட்டது.

இந்தக் கோவில் கட்டுவதில் மேற்கூறப்பட்ட காரணங்களை விட விசேடமாக சில சம்பவங்களும் காரணமாக அமைந்தன. இத்தகைய பாரம்பரிய வழிபாட்டுமுறைகளுக்கப்பால் வைதீக முறைப்பாட்டிலான வழிபாடுகளிலும் மணற்பகுதி மக்கள் ஈடுபட்டு வந்தனர். ஆவரங்கால் சிவன் கோவிலில் சிவன் திருவிழாவின் 8வது உபயகாரராக கிராமத் தவர்கள் இருந்து வந்தார்கள் அந்தத் திருவிழாவை திரு.க.பண்டாரி அவர்கள் தலைமையேற்று ஊர்மக்களிடம் நிதி பொருட்கள் சேர்த்து கோவில் நிர்வாகத்திடம் கொடுப்பது வழக்கமாயிருந்தது. ஆனால் எம்மவர் எவரும் பூசையில் கலந்து கொள்ள முடியாது பாரபட்சம் காட்டப் பட்டனர். இதை எமது மக்கள் சமூக ஒடுக்கு முறையாகவே கருதினர். பலகாலமாக திருப்பணி வேலைகளுக்காக கோயில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. பின்னர் திருப்பணி முடிந்து கும்பாபிஷேகம் நடைபெற்று உற்சவங்கள் நடைபெற்று வந்தவேளை பாகுபாடுகள் அகற்றப்பட்டு சகலரும் உரியவாறு வழிபடக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. திருவிழாக்களின் போது பல இசை நடன நிகழ்ச்சிகளும் மேடையேற்றப் பட்டன. அந்த நேரத்தில் எமது கிராமத்துக்கான உபயத்தின் போது சமூகத்தில் இடையில் பாண்டித்தியம் பெற்ற ஒருவரின் இசைக்கச் சேரியை மேடையேற்ற முயன்ற போது அதற்கான தடைகள் விதிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டன. அதன்பின் பாகுபாடுகளுடன் இக்கோவிலில் பங்குதாரராக இருக்க எமது மக்கள் விரும்பாமையும் எமது கிராமத்தில் கோவி லொன்றை ஆகம விதிப்படி அமைக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டது. இருந்தாலும் காலப்போக்கில் கோவில் நிர்வாகத்தினால் இத்தகைய பாகு பாடுகள் நீக்கப்பட்டு வழிபாடுகள் நிறைவேற்ற ஒழுங்கு செய்யப்பட்டி ருப்பது ஈண்டு வரவேற்கத்தக்கது.

அமரரது தலைமையின் கீழ் கோவில் நிர்வாகம் இருந்த போது நாளாந்த பூசைக்குத் தேவையான நைவேத்தியங்களைச் செய்வதற்கோ அல்லது விசேட உற்சவங்களுக்கு வேண்டிய பிரசாதங்களைச் செய்வ தற்கோ மடப்பள்ளி இல்லாத குறையிருந்தது. இது அமரர் அவர்களைக் கவலையுற வைத்தது. ஆகவே ஒரு மடப்பள்ளியை கற்களினால் அமைப் பதற்கான முயற்சியை மேற்கொண்டும் அப்போதைய ஊரின் பொருளா தார நிலையில் பொதுவான நிதிதிரட்டி அதை மேற்கொள்வது சாத்தியமில் லாமல் போய்விட்டது. இதனால் அமரர் தலைமையிலான இரண்டாவது திருவிழா உபயகாரரினால் இந்த மடப்பள்ளி சீமெந்தினால் அமைக் கப்பட்டது. இதன் பின்னர் 1978ல் இதேகோவிலில் தனது மணிவிழாவை மேளதாளத்தோடு அன்னதானம் வழங்கி மிக விமர்சையாகக் கொண்டாடினார்கள். அமரர் தன் மனையாள் தெய்வானையுடன் மண வறையில் இருக்க குருக்கள் வேதமோத மக்கள். மருமக்கள் வாழ்த்தி மலர் சொரிய புதிதாய் உருவாக்கிய தாலிகட்டி தனது 60ஆம் கல்யாணத்தை (மணிவிழா)க் கொண்டாடி மகிழ்ந்தார். இதுவே இக் கோவிலில் நடந்த ..... இவ்வூரிலே நடந்தேறிய முதலாவது மணிவிழா நிகழ்வாகும். இப்படியாக இதன் பின்னர் கோவிலில் பல காலமாக திருப்பணி வேலைகளோ அல்லது திருத்த வேலைகளோ விசேட நிகழ்வு களோ எதுவும் குறிப்பிடக் கூடியளவு நடைபெறவில்லை. அமரர் அவர்கள் கோவிலுக்கு ஒரு மணிக்கூட்டுக் கோபுரம் அமைக்க வேண்டுமென அவாக் கொண்டிருந்தார். ஆனாலும் அதை அமைக்க அவரிடம் வசதிகள் இருக்கவில்லை இதையிட்டுக் கவலை கொண்டிருந்தார். இக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையை தன் குடும்பத்தாருடன் கலந்தாலோசித்த போதெல்லாம் தெரிவித்தார். இந்த நிலையில் அமரரது மகளான சந்திரதேவியின் கணவன் திரு.வே.செல்வயோகநாதன் வெளிநாடு சென்றிருந்தார். இவர் சிறந்த தெய்வபக்தியுள்ள குடும்பத்தில் பிறந்ததனாலும் அமரரது கவலையை அறிந்தவராதலாலும் வெளிநாட்டில் தனது முதல்மாதசம்பளத்தில் இந்த மணிக் கூட்டு கோபுரத்தை அமைக்க முன்வந்தார். ஆனாலும் அப்போதைய நிலையில் கல்லினால் அதைக்கட்ட முடியவில்லை. காரணம் அக்காலகட்ட யுத்த சூழ் நிலையினால் சீமெந்து முதலான மூலப்பொருட்கள் கிடைக்கவில்லை. இருந்தாலும் கிடைத்த பொருட்களைக் கொண்டு காண்டாமணிக் கோபுரம் அமைக்கப்பட்டது. பின்னர் கோவில் திருப்பணி வேலைகள் நடைபெறும் போது எவ்வளவு செலவானாலும் கோபுரத்தை அமைத்துத் தருவதாகவும் வாக்குறுதியளித்தார். இதைக்கோவில் நிர்வாகமும் ஏற்றுக் கொண்டது. பின்னர் 1992ம் ஆண்டு நல்லதொரு நாளில் மணிக் கூட்டுக்கோபுரத்துக்கு அபிஷேகமும் நடைபெற்றது. அமரர் அவர்களே. அதைத் தர்ப்பை போட்டு காளாஞ்சி பெற்று கிரியைகளைச் செய்தார். அமரர் அவர்களுக்கு இக் காண்டாமணியை முதன்முதலாக அசைத்து ஓசையெழுப்ப உரிமை இருந்த போதும் அந்த உரிமையும் கோவில் நன்மை கருதி ஏலம் விட ஒப்புக் கொண்டார். இதை ஏலத்தில் எடுத்து முதன்முதலாக கண்டாமணியை அசைத்து ஓசை யெழுப்பிய பெருமை திரு.க.ஆறுமுகம் அவர்களையே சாரும்.

இதன் பின்னர் 1995ஆம் ஆண்டு நடைபெற்ற பாரிய இராணுவ நடவடிக்கை காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் வெறியேற வேண்டிய தேவை ஏற்பட்டது. மணற்பகுதியிலிருந்தும் எல்லோரும் வெளியேறி வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். இக்காலகட்டத்தில் கோவிலும் பலத்த சேதமடைந்தது. பின்னர் ஊர் திரும்பிய மக்கள் கோவிலை மீளப்புதிப்பிக்க வேண்மென வும் திருப்பணி வேலைகளைத் தொடங்கவும் தீர்மானித்தனர். இதன் நிமித்தம் பாலஸ்தானம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் ஆரம்பிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டன. நாள் வேலைகள் நடைபெற்ற வேளையில் ஒரு சுப முகூர்த்தத்தில் அத்திவாரமிடப்பட்டது. அதில் ஈடுபட்டுள்ள பலரில் ஒருவராகப் பங்கு பற்ற கோவிலின் ஸ்தாபகத் தலைவராக இருந்த அமரருக்கும் புவனேஸ்வரியின் அருள் கிட்டியது. இந்தத்திருப்பணியின் போது முன்னர் கண்டா மணி வேலைகளை உபயமாகச் செய்த அமரரது மகளின் குடும்பத்தினர் முன் வந்த போது அதற்கு அனுமதி வழங்காமையை இட்டு அமரரும் குடும்பத்தினரும் மிகுந்த கவலை அடைந்தனர். அதற்கான காரணமாக தனிப்பட்ட எவருக்கும் எந்த வேலையையும் கொடுப்பதில்லை எனவும் பொது வேலைத் திட்டமாகவே சகலதும் நடைபெறுமெனவும் கூறப்பட்டது. இருந்தாலும் பொது வேலைகளுக்கான நிதி போதியளவு கிடைக்காத நிலையில் தீர்மானத்துக்கு மாறாக பின்னர் ஒவ்வொரு வேலையும் பலவாறாக பிரித்து வழங்கியே திருப்பணி வேலைகள் முடிவுறுத்தப் பட்டன. இருந்தும் கண்டாமணி வேலைகள் மகன் குடும்பத்துக்கு கோவில் சமூகமானது அனுமதி அளிக்காமல் விட்டமை அமரருக்கு கவலையை அளிக்கும் விடயமாகவே இருந்து வந்தது.

இதற்கிடையில் 1978ம் ஆண்டு வாக்கில் கலையகம் சனசமூக நிலையமானது தனது நிர்வாகப்பரப்பில் நிலவும் சிறு பிணக்குகளை தீர்த்து வைக்குமுகமாக ஒரு இணக்கசபையை ஏற்படுத்தியிருந்தது. இதன் தலைவராகவும் அமரர் தெரிவாகிய தோடு செயலாளராக ஓய்வு பெற்ற அதிபர் திரு.க.முருகேசு அவர்களும் கடமையாற்றினார். இவரது தலைமையிலேயே பல காரணங்களால் திறக்கப்படாதிருந்த ஸ்ரீ புவனேஸ்வரி அம்மாள் வீதியும் ஆவரங்கால் கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வீதியும் அதிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் வீதியும் திறந்து எல்லையிடப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவர் தந்தை செல்வாவின் அகிம்சை வழிப்போராட்டங்களில் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தாலும் அதை உரியவர்கள் ஏற்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டால் ஆயுதம் ஏந்துவதில் தவறில்லை என்ற இறுக்கமான கொள்கை யைக் கொண்டிருந்தார். தன் வாழ்நாளில் தாம் சார்ந்தசமூகத்துக்காக பல சேவைகளைச் செய்திருந்த போதும் அதற்காக போராட வேண்டிய தேவை அவருக்கு இருக்கவில்லை. தனது நாவன்மையும் விடாமுயற் சியுமே ஆயதமாகக் கொண்டு அவற்றைச் சாதித்தார். இறுதிக் காலத்தில் தளர்ந்த நிலையிலும் விடுதலைப் போரில் போராளிகளின் வெற்றிக்ளைக் கண்டு குதூகலித்தார். போரின் உக்கிரமான நிலையும் மனைவி கொடுமையான நோய்க்கு உள்ளானமையும் அமரரை ஓரளவு தளர் வடையச் செய்தது. இந்த நிலையில் 1994ம் ஆண்டு தியாகி திலீபனின் நினைவு நாளன்று அமரரின் மனைவியான தெய்வானையவர்கள் இறைபதமடைந்தார்கள். அவரது மனைவியின் மறைவும் 1995ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் குடா நாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வும் அமரரைப் பெரிதும் பாதித்தது. அத்துடன் முதுமையும் அமரரை நடை தளரவைத்தன. இந்த நிலையிலும் கலையகம் சனசமூக நிலைய கட்டிட வேலையும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் திருப்பணி வேலையும் மிக விரைவாக செய்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்டோரிட மெல்லாம் வேண்டிக் கொண்டார்.

இப்படியாக ஊர் பெருமக்கள் எமதூரின் முன்னேற்றத்தில் கொண்டிருந்த ஆர்வத்தை ஒன்று திரட்டி தலைமை வகித்து மிகத் திறமையாகச் செய்து முடித்த பெருமை அமரர் அவர்களையே சாரும். வேறெந்தவிடத்தும் யாராலும் செய்ய முடியாத பல விடயங்களை அமரர் செய்திருந்தும் அவர் உயிரோடு இருந்த காலையில் அவரைக் கௌர விக்க அமரரால் உருவாக்கப்பட்ட எந்த நிறுவனமும் முன்வராதது எதிர் காலத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் பின்னடைவைக்காண ஏதுவாக இருக்கலாம். தற்போது அந்நிறுவனங்களை வழிநடத்துவோரின் சேவை களும் உரியவாறு போற்றப்பட்டுக் கௌரவிக்கப்படாமல் போகலாம் என்று கலங்க வேண்டியுள்ளது. ஒருவர் உயிரோடிருக்கும் போது அவருக்கு வழங்கப்படும் பாராட்டுக்களே, எதிர்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலதலைவர்களும் திறமைசாலிகளும் உருவாக வழிவகுக்கும் என்பதை சான்றோர் சொல்லக் கேட்டிருக்கிறோம். அதை அப்படியே கைக்கொண்டு இந்தக் கொள்கையை இறுக்கமுடன் கையாண்டு எமது அடுத்த சந்ததிக் கும் கொண்டு செல்ல வேண்டியது நிர்வாகிகளின் கடமையாகும். இவ் விதமாக தனது உடல் பொருள் சேவையை தனது சமூக மக்களின் உயர்வுக்காக அர்ப்பணித்த ஒரு தலைமகனின் இனிய அத்தியாயம் தன் இறுதியை நெருங்கிக் கொண்டிருந்தது. தன்னைப் பற்றிய குடும்பத்தின் சுமையை அவர் எண்ணிக் கவலைப்பட்டார். எவரும் தனது சுயத்தில் இயங்கும் போதே சாவடைந்து விட வேண்டும் எனக் கூறிவந்தார். உழைப்பற்று தன் குடும்பத்தவரில் தங்கி நின்று அவஸ்தைப்பட்ட பல முதியவர்களின் நிலைகண்டு கலங்கினார். தனது கடமை எல்லாம் நிறைவடைந்து விட்டபின் தான் ஏன் இன்னும் வாழ வேண்டுமென எண்ணினார். ஆகவே தன்னை மிகவிரைவாக ஆட்கொள்ள வேண்டு மென எல்லாம் வல்ல இறைவனை வேண்டினார். ஆம் அவரது வேண்டுகோள் இறைவனால் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அதனாலன்றோ தூரதேசத்துக் கெல்லாம் தனந்தேடவும் அடைக்கலம் நாடியும் சென்ற அமரரின் மக்களும் வந்து இறுதியுரையாட அந்த அரனாரும் அருள் புரிந்தார். ஆம் அமரரின் மக்கள் எண் மருடன் மருமக்கள் பேரப்பிள்ளைகளென பல உறவினரும் கூடியிருக்க 2004ம் ஆண்டு பங்குனி மாதம் 4ம் திகதி பூர்வபக்க திரயோதசி திதியும் பூச நட்சத்திரமும் கூடிய ஒரு நல்ல வேளையில் அன்னாரின் ஆன்மாவை ஆண்டவனும் தன தாக்கிக் கொண்டார். எல்லாம் நிறைவேறிய திருப்தியில் அமரரும் எந்த விதமான வேதனைகளுக்கும் உள்ளாகாமல் மிக அமைதியாக இவ்வுலகை நீத்தார்.

அன்னாரின் உடல் எம்மை விட்டுப் பிரிந்தாலும் அவரது ஆத்மா அவர் தலைமை வகித்து உருவாக்கிய நிறுவனங்களையே சுற்றி வட்டமிடும். அதன் வளர்ச்சியை எண்ணிச் சந்தோஷப்படும். இந்த நிலை யில் தன் சொல்லாலும் செயலாலும் செயற்கரிய கடமையி னாலும் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தை வென்ற நிலையில் இந்த மண்ணின் வாசமாக அவர் என்றும் மணப்பார். அவர் ஆத்மா சாந்தியடைய அவரது ஏக்கங்களை நிறைவு செய்து நாமும் பெருமையுறுவோமாக.........

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුව
*பாராளுமன்றம்*
**PARLIAMENT**

# சிவலை அரியகுட்டி
# 100 ஆண்டு நிறைவு

ஆவரங்கால் புத்தூர் மணற் பகுதியில் 1981ல் பிறந்து வளர்ந்து 86 ஆண்டுகள் வாழ்ந்து மக்கள் தொண்டனாக, மாண்புற்ற தலைவனாக விளங்கிய அரியகுட்டியின் நினைவுகளை அன்னார் 100 ஆண்டில் நன்றியுணர்வுடன் விழாவெடுத்து வரலாறு பதிப்பது மனதிற்கு நிறைவு தருகிறது.

1940களிலிருந்து தமிழ்க் காங்கிரஸ் செல்வாக்கிலிருந்த ஆவரங்கால் கோப்பாய் பிரதேசம் அமரர் வன்னியசிங்கத்தின் அரசியல் தலைமையின் காலத்தில் 1952லிருந்து தமிழரசுக்கட்சிக் கோட்டையாக மாறியிருந்தது. அந்த மாற்றத்தை ஏற்படுத்தியவர்களில் ஆவரங்கால் சின்னத்துரை அண்ணர் முன்னணிவகித்த அக் காலத்தில் புத்தூர் கிராம சபையை ஆட்சி நிர்வாகத்தைக் கைப்பற்றி தேர்தலில் வெற்றிபெறச் செய்வதில் அமரர் அரியகுட்டி தளபதியாய் விளங்கியவர். புத்தூர் கிராமசபையின் தலைவராகிய சின்னத்துரை அண்ணரும், துணைத் தலைவராயிருந்த அரியகுட்டியும் தங்கள் ஊரில் மட்டுமல்ல கோப்பாய் தொகுதியெல்லாம் தமிழரசு வாலிப முன்னணியை, கட்சியை வளர்த்த பெருமைக்குரியவர்களாய் விளங்கினர்.

மக்களிடமும், சமூக மட்டத்திலும் அம்மக்களின் மேம்பாட்டிற்காக கிராமசபை மூலமாகவும் பாராளுமன்ற உறுப்பினர் வன்னியசிங்கத்தினூடாகவும் வினைத்திறனுடன் தம்மை முழுமையாக அர்ப்பணித்துவந்தவர். மக்களிடத்திலே பெரும் நம்பிக்கையையும், மதிப்பையும் பெற்றிருந்தவர். தமிழரசுக்கட்சியின் கூட்டங்களில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநாடுகளில், போராட்டங்களில் எல்லாம் மக்களை அணிதிரட்டிப் பங்குகொண்டு வரலாறு படைத்தவர். மக்களிடத்தில் அன்பும், பணிவும், பக்குவமும், பண்பும் ஆளுமையும் நிறைந்த வராய் பணியாற்றியவர்.

1944லிருந்து புத்த கலட்டி விளையாட்டுக்கழகம், வாசிக சாலை (கலையகம்), சிறீ விஷ்ணு வித்தியாலயம், பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் என்பவற்றை உருவாக்கி மக்கள் கல்விக்காகச் சமூக மேம்பாட்டிற்காகப் பணியாற்றினார். அச்சுவேலி பனை - தென்னை அபிவிருத்திச் சங்கத்தை உருவாக்கி அதன் துணைத் தலைவராயிருந்து பணியாற்றினார். அரியகுட்டி அவர்கள் ஆன்மீக ஈடுபாடு கொண்டவர். 1972 காலத்தில் சிறீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தை நிறுவி மக்களிடம் சைவ சமயத்தை வலுவூட்டி சைவ நம்பிக்கையைக் கட்டியெழுப்பினார்.

தந்தை செல்வா, தலைவர் வன்னியசிங்கம், தளபதி அமிர்த லிங்கம் முதலான தமிழரசுத் தலைவர்களிடம் பெருமதிப்பையும், நம்பிக்கையையும் பெற்றுத் திகழ்ந்தார். தமிழரசு கொள்கைக் குடம் பத்தில் கட்சியில் ஒரு தொண்டனாக மக்கள் மதிப்புமிக்க தலைவனாக இறுதிவரை சான்றாண்மை பெற்று வாழ்ந்தவர்.

அவர் தன் குடும்ப வாழ்வாதாரத்தின் பொருட்டு வேளாண் மையிலும், கைத்தறி நெசவிலும் ஈடுபட்டு வியர்வை சிந்தி உழைத்து அவ்வுழைப்பினால் மக்கள் தொண்டும் இயற்றி வாழ்ந்த உதாரண மனிதராய் விளங்கினார்.

அன்னார் ஆன்மீகத்தில், ஆத்ம வழிகாட்டலில் தன் மகன் பரஞ்சோதி வடக்கு மாகாணசபை உறுப்பினர் மக்களிடம், தமிழரசுத் தொண்டனாகத் தலைவனாக தமிழின விடுதலைக்கு ஆற்றும் வகி பாகம் பாராட்டுக்குரியது என்றால் அப் பெருமை தந்தை அரியகுட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் உரித்தாகும். அன்னார் சமூக, அரசியல் பணியை, இலட்சியப் பற்றைப் பாராட்டி கனடா ஆவரங்கால் ஒன்றியம் "இராச நட்சத்திரம்" எனப் பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தியுள்ளமை மகிழ்ச்சி தருகிறது.

பெருமகனார் அரியகுட்டியின் 100ஆண்டு வரலாறு நினைவு மலராக வெளிவருவது அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் செயலாகும். அத்தோடு 100ஆண்டு நினைவு விழா நன்றியுடன் கொண்டாடுவதும் தக்காரைப் பெருமைப்படுத்தும் தமிழர் பாரம்பரியத்தை, தமிழினத்தின் நாகரிகத்தை மேம்படுத்தி நிற்கின்றது.

இந் நிகழ்ச்சியில் பங்குபெறும் வாய்ப்பு மகிழ்ச்சி தருகின்றது. எம் இதய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் அர்ப் பணிக்கின்றோம்.

**மாவை.சோ.சேனாதிராசா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பா.உ**

**தலைவர், இலங்கை தமிழரசுக் கட்சி.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈஸ்வரபாதம் சரவணபவன்**
**ඊශ්වරපාදම් සරවනබවන්**
**Eswarapatham Saravanapavan**

நாடாளுமன்ற உறுப்பினர் | Member of Parliament | පාර්ලිමේන්තු මන්ත්‍රී
யாழ்ப்பாண மாவட்டம் | Jaffna District | යාපනය දිස්ත්‍රික්කය
தமிழ் தேசிய கூட்டமைப்பு | Tamil National Alliance | දෙමළ ජාතික සන්ධානය

அலுவலகம் / office / කාර්යාලය } 021 221 9616 — தொலைநகல் / Fax / ෆැක්ස් } 021 221 9616 — ஈ.மெயில் / e.mail / ඊමේල් } tnampsara@gmail.com — கைபேசி / Mobile / ජංගම දුරකථන } 071 411 5002


**சமய, சமூக, மொழி, இனத்துக்குத் தொண்டாற்றிய அமரர் சிவலை அரியகுட்டி நூறாவது பிறந்த நாள் நினைவு மலருக்கான செய்தி**

விவசாயமும், ஆன்மீகமும், கல்விச் செழிப்பும் தமிழ்பற்றும், சமயப்பற்றும் கொண்ட மக்களை தன்னகத்தே நிறையப்பெற்ற புதூர் மண்ணில் உதித்த சிலை அரியகுட்டி இன்று நம் மத்தியிலில்லை "நெருநல் உளன் ஒருவன் இன்றில்லையெனும் பெருமையுடைத்து இவ் உலகு" என்கின்ற வள்ளுவன் வாக்கு யாமறிந்ததே. அவர் இன்றிருந்தால் அவருக்கு அகவை ஒரு நூறு. அவர் அமராகி பதினான்கு ஆண்டுகள் ஆகிய போதும், அவர் ஆற்றிச் சென்ற பணிகள் இன்றளவும் எச்சங்களாக இருந்து அவரைப்பற்றிப் பேச, எழுத நினைக்க வைக்கிறது.

குடும்ப நிலை காரணமாக தனது தொடக்கக் கல்வியை மூன்று ஆண்டுகள் மட்டும் மட்டுப்படுத்திக் கொண்ட போதும், கல்விச்சாலையமைத்தல் உள்ளிட்ட உயரிய சமூகக் கடமைகள் பலவற்றில் அவர் முன்னோடியாக இருந்துள்ளமையை அறிய முடிகின்றது. ஒரு காலத்தில் தமிழ் சமூகத்தின் விளையாட்டு , சமூக மேம்பாடுகளுக்கு, சன சமூக நிலையங்களும், விளையாட்டுக்கழகங்களும், கோவில்களும் களங்களாகத் திகழ்ந்தன. நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னரே, அத்தகையவற்றை தனது கிராமத்தில் தொடக்கி வைத்த முன்னோடியாக இவர் திகழ்ந்ததனை அவர் விட்டுச் சென்ற எச்சங்கள் சுட்டி நிற்கின்றன. கல்வியின் பயனும் இத்தகைய சமூகப் பணிகள் தானே. தனக்கு சமூகத்துக்கும் ஒரு பயனுள்ள குடிமகனாக வாழ்கின்ற பயனை அவர் மிகச் சிறப்பாக ஆற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகையோரின் விடாமுயற்சியும் முன்னுதாரண வாழ்வு உதராணமுமே, இப்புத்தூர் மண்ணில் உலகத்தரம் வாய்ந்த பாடகர்களும், கவிஞர்களும், கலைஞர்களும், கல்வியிலாளர்களும், சமூக சேவையாளர்களும், கூட்டுறவாளர்களும், அரசியலாளர்னளுமென பலர் உருவாகி, நாட்டின் நாலாபாகங்களிலும் தமது செயற்பாடுகளை முன்னோக்கிக் கொண்டு செல்லக் காரணமெனக்கூறினால் அது திகையாகாது.

இவர் வாழ்நாளில் இவரது சமூகத் தொண்டினைப் பாராட்டி விருதுகளும், பட்டங்களும் கிடைக்கப்பெற்றுள்ளார். இறந்த பின்னரும் அவர் நினைவு கூரப்படுகின்றார். அந்த வகையில் அவர் இப்போதும் வாழ்கின்றார் என்றே கொள்ளப்பட வேண்டும்.

அவர் பற்றிய சில நினைவுகளை மீட்க, அவரது நூறாவது ஜனன நாளில் மலர் ஒன்றினை வெளியிடுகின்ற, நன்றி மறவாத உறவுகளுக்கு பாராட்டுதல்கள்.

அவரை முன் மாதிரியாகக் கொண்டு நாம் அனைவரும் சமய, சமூக, மொழி, இன விடுதலைத் தொண்டாற்ற முன்வரவேண்டுமென் கின்ற செய்தியினை அவர் எம் ஒவ்வொருவர் மத்தியிலும் விட்டுச் சென்றுள்ளார்.

**ஈ.சரவணபவன்,**
**உதயன் குழும தலைவரும்,**
**கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற**
**உறுப்பினரும்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீ.வீ.கே. சிவஞானம்**
அவைத் தலைவர், வடக்கு மாகாண சபை
**සී. වී. කේ. සිවඥානම්**
සභාපති, උතුරු පළාත් සභාව
C.V.K. Sivagnanam
Chairman, Northern Provincial Council

A9 வீதி, கைதடி ( யாழ்ப்பாணம் )
A9 පාර, කයිතඩි ( යාපනය )
A9 Road, Kaithady. ( Jaffna )

மின்னஞ்சல் / විද්‍යුත් තැපෑල / e - mail } cvkayes@gmail.com

தொலைபேசி / දුරකතන / Telephone } 021 205 7084, 021 205 7081 (208)

தொலைநகல் / ෆැක්ස් / Fax } 021 205 7086

*அமரர் சிவலை அரியகுட்டி அவர்களின் நூறாவது பிறந்த நாள் நினைவு தினக்கொண்டாட்டம் என்பது ஒரு கிராமத்தின் முன்னோடி ஒருவரின் நினைவு தினமாகவே பார்க்க முடியும்*

1918.04.17 ஆம் திகதி புத்தூர் பிரதேசத்தில் ஆவரங்கால் பகுதியில் மணற்பகுதிக் கிராமத்தில் பிறந்த அமரர் அரியகுட்டி அவர்கள் குடும்ப நிலை காரணமாக தனது ஆரம்பக்கல்வியை தொடர முடியாது போயிற்று எனினும் மகாபாரதம், இராமாயணம் புராணக் கதைகள் போன்றவற்றைக் கற்றுக் கொண்டார் எனினும் தமது சுயமுயற்சியில் விவசாயம் மற்றும் கைத்தறி நெசவு தொழிலில் ஈடுபட்டு தனது குடும்பத்தைப் பராமரித்தது மட்டுமன்றி பல்வேறு சமூக சேவைகளிலும் ஈடுபட்டார்

அரசியலில் ஒரு தமிழ் தேசிய உணர்வாளனாக திகழ்ந்த அமரர் அரியகுட்டி இலங்கை தமிழரசு கட்சியின் ஆவரங்கால் கிளையின் உப தலைவராக நீண்ட காலம் சேவையாற்றினார் மேலும் புதூர் கிராமசபையின் உறுப்பினராக 1968 ஆனி மாதம் தெரிவு செய்யப்பட்டு அதன் உப தலைவராக 1975 முதல் 1977 வரை பணியாற்றினர்

தமது சமூக சேவைத்துறையில் பின்வரும் அமைப்புக்களின் ஸ்தாபக தலைவராக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

அ). 1944 இல் புத்தகலட்டி விளையாட்டுக்கழகம் - தற்போது வீனஸ் என பெயர் மாற்றம்
ஆ) 1948 இல் புத்தகலட்டி வாசிகசாலை - தற்போது (1957 இல்) கலையகம் என பெயர் மாற்றம். கலையகம் - சனசமூக நிலைய காணி நன்கொடை.
இ) 1957 இல் புத்தகலட்டி சிறி விஷ்ணு வித்தியாலயம்
ஈ) 1962 இல் புத்தகலட்டி பலநோக்கு கூட்டுறவு சங்கம்
உ) 1970 இல் அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஸ்தாபக உப தலைவராக பாராளுமன்ற உறுப்பினரின் சிபார்சில் நியமனம்.

ஊ) 1972 இல் சிறி புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் ஸ்தாபித்தல்

அமரர் அரியகுட்டி அவர்களின் அளப்பரிய சமூக சேவைகளை கௌரவிக்கும் முகமாக கடா ஆவரங்கால் ஒன்றியம் அவருக்கு "இராச நட்சத்திரம்" என்னும் பட்டம் வழங்கி கௌரவித்தமை அவரது பெருமைக்கான சான்றாக விளங்குகின்றது.

அன்னாரது பெருமையும் புகழும் எல்லோரது நினைவிலும் நிறைந்து நிலைபெற வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

சீ.வீ.கே.சிவஞானம்
அவைத்தலைவர்,
வட மாகாணசபை

சீ.வீ.கே. சிவஞானம்
அவைத்தலைவர்
வடக்கு மாகாணசபை

வதிவிடம் / නිවස / Residence → முகவரி / ලිපිනය / Address } 904/5, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 904/5,පේදුරු තුඩුව පාර නල්ලූර්, යාපනය. 904/5, Point Pedro Road, Nallur, Jaffna.

தொலைபேசி / දුරකතන / Telephone } 021 - 222 - 9702, 077 - 116 - 6121, 071 - 318 - 6121



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பால் உயர்ந்த உத்தமன்

மணற்பகுதி என்ற சொல்லுக்கு தனியான சிறப்பும் வரலாறும் உண்டு என்று சான்றோர்கள் கூறக்கேட்டிருக்கின்றேன். ஆரம்பத்தில் இருந்து இன்று வரையும் மணற்பகுதி என்ற பெயர் அப்பகுதி மக்களின் ஒழுக்கமான பழக்கவழக்கங்களாலும் அமைதியானவாழ்க்கை முறை யாலும், அடிப்படையான வளங்களைப் பேணிக் காத்து வந்ததாலும் அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் கல்வியிலும், தொழில் வளங்களிலும் வளர்ச்சி அடைந்த நிலையில் காணப்படுகின்றார்கள். நீர்வளமும், நில வளமும் நிரம்பப் பெற்ற கிராமம். ஒரு புறத்தே குளங்களும் மறுபுறத்தே கடலும் சூழ்ந்த பகுதியாக விளங்குகின்து மணற்பகுதி. இப்பகுதியைச் சூழ தேவஸ்தானங்களான புவனேஸ்வரி அம்மன், முருகன் கோவில், கன்னாரை அம்மன் ஆகியன அமைந்த வண்ணம் இருக்கின்றன. தற்போது விஷ்ணு வித்தியாலயமும் அமைந்திருக்கின்றனர். இப்பகுதி மக்களின் முக்கிய தொழில் விவசாயம். விவசாயத்தில் நவீன உத்தி களைக் கடைப்பிடித்து நல்ல இலாபம் ஈட்டினார்கள். விவசாய கூட்டுறவுச் சங்கத்தை அமைத்து தமது உற்பத்திப் பொருளான வெங்கா யத்தை கொழும்புக்கு சந்தைப் படுத்தினார்கள்.

மணற்பகுதி என்ற சிறப்பு மிக்க பகுதியில் தான் அமரர் அரிய குட்டி பிறந்தார். நான் சிறுவனாக இருந்த பொழுது அவரை எனக்கு நன்கு தெரியும். சிவந்த மேனி படைத்தவர். ஓரளவான உயரமுடைய வர். எந்நேரமும் புன்சிரிப்புடையவராக விளங்குபவர். ஏற்றத்தாழ்வு பாராட்டாது எல்லோரிடத்திலும் அன்பாகப் பழகுவார். பொறுமையுள்ள வர். அவரிடத்தில் கோபம் வருவதே கிடையாது. யாருக்கும் கஸ்ட துன்பம் வந்த வேளையில் உதவி செய்வதில் பின்நிற்க மாட்டார். மக்களிடத்தில் நடைபெறுகின்ற துக்கம், துயரமான நிகழ்வுகளிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களகரமான நிகழ்வுகளிலும் ஓடிச் சென்று பங்குபற்றி உதவி செய்வார். மக்களிடத்தில் பலவிதமான நிகழ்வுகளிலும் ஓடிச் சென்று பங்கு பற்றி உதவி செய்வார். மக்களிடத்தில் பலவிதமான பிணக்குகள் வரும் பொழுது அதனை தீர்த்து வைப்பதில் பின் நிற்க மாட்டார். ஏழை களிடத்தில் மிகப் பிரியமாக நடந்து அவர்களுக்கு வேலை வாய்ப்புக் களைப் பெற்றுக் கொடுப்பதில் அயராது உழைத்து வருவார்.

இவருடைய பிறப்பு மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்தாலும் தனது அயராத உழைப்பினால் தனது எல்லா வளத்தையும் பெருக்கிக் கொண்டார். இவரை ஒத்த சம காலத்தில் கூட்டாளிகளாக பலபேர் இருந் தார்கள். அவர்கள் எல்லோரையும் வழி நடத்திச் செல்லும் ஆற்றல் உடையவராகத் திகழ்ந்தார்.

இவர்கள் எல்லோருடைய ஆற்றலுக்கும் ஏற்ப போதிய இடப் பரப்பு அப்பகுதியில் இருந்தமையால் ஆரம்பத்தில் கரப்பந்தாட்டத்தை ஆரம்பித்தார். அது ஒரு விளையாட்டுக்கழமாக ஆரம்பித்து இவ் மாவட் டத்தில் சிறந்த கழகமாக வளர்ச்சியுற்று நீண்ட காலமாக இருந்து வந்தது. அது மட்டுமல்லாமல் அவர்களது விளையாட்டு எல்லோரையும் ரசிக்கக் கூடியதாக அமைந்திருந்தது. ரசிகர்கள் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

மக்களின் அறிவை பெருக்கும் நோக்கத்தில் சனசமூக நிலை யத்திற்கு காணி நன்கொடையாகக் கொடுத்து இயங்கி வளர்ச்சியடைவ தற்கு அயராது பாடுபட்டார்.

தனது ஓய்வு நேரங்களில் பத்திரிகை வாசித்தல், நாவல்கள் வாசித்தல், மாகாபாரதம், இராமாயணம் ஆகிய காப்பியங்களை வாசிப்பதோடு, புராண, இதிகாசங்களையும் வாசித்து வந்தார். பொது நிகழ்வுகளில் தலைமை தாங்கி சிறந்த பேச்சாளனாகத் திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர். அக்கட்சிக்காக அயராது உழைத்தவர். தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினராக இருந்து. ஆவரங்கால் கிளையின் உபதலைவராக பதவி வகித்தவர்.

புத்தூர் கிராமசபையின் உறுப்பினராக இருந்து உப தலை வராகவும் பதவி வகித்தவர்.

அச்சுவேலி தெற்கு பணப் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் உபதலைவராக இருந்தவர். விஷ்ணு வித்தியாலயத்தை அமைப்பதிலும், புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தை அமைப்பதிலும் முன்னின்று உழைத்தவர்.

இவர் மக்களுக்கு ஆற்றிய சேவையைக் கௌரவித்து ஆவரங் கால், கனடா ஒன்றியம் இராச நட்சத்திரம் என்ற கௌரவ பட்டத்தை 10.07.2017ல் வழங்கியது.

அப்பகுதி மக்களின் சுய தொழில் மேற்கொள்ளும் வண்ணம் வெங்காயக் கூடு இழைப்பதில் அவர்களை பயிற்றுவித்து அவர்களுக்கு அதனால் வருமானத்தை பெற்றுக் கொடுப்பதில் முன்னின்று உழைத் தார். அரசாங்கத்தின் உதவியைப் பெற்று நெசவு, தும்புத் தொழில்களை ஆரம்பித்து வைத்து இளைஞர்கள், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக் களை ஏற்படுத்திக் கொடுத்தார்.

தனது குடும்பத்தை சீரும் சிறப்புமாக பேணிப் பாதுகாத்து வந்தார். அவரது பிள்ளைகள் கல்வி, அறிவில் மேம்பட்டவர்களாகத் திகழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் அனைவரும் தந்தையின் குணத் திற்கு ஏற்றவாறு வாழ்ந்து வருகின்றார்கள். மக்களும் அவர்களிடத்தில் மிகவும் பிரியமுள்ளவர்களாக இருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்கு பரம்சோதி என்னும் நாமத்தையுடைய ஆண்மகன் ஒருவர் உண்டு. அவரும் தந்தையின் வழியைப் பின்பற்றி அரசியல் கட்சியான தமிழரசுக் கட்சியில் இருந்து வருகின்றார். பரம்சோதி அவர்கள் யாழ் மாநகரசபையின் முன்னாள் உறுப்பினராகவும் தற்போது வடமாகாண சபை உறுப்பினராகவும் பதவி வகித்து வருகின்றார். மக்களுக்கு பல்வேறு சேவைகளை செய்து மக்களின் பாராட்டைப் பெற்று வருகின்றார்.

இந்த வேளையில் அமரர் சிவலை அரியகுட்டியின் நூறாவது பிறந்த தினத்தையும், நினைவு தினத்தையும் ஒருங்கே கொண்டாடும் முகமாக அவரைப் பற்றி சிறுகுறிப்புக்களை கட்டுரையாக வரைந்து சமர்ப்பிப்பதில் எனக்கக் கிடைத்த பெரும்பாக்கியமாக கருதுகின்றேன்.

ஆவரங்கால் — மூ.ஆனந்தகிருஷ்ணன்
புத்தூர் — சமாதான நீதவானும், முன்னைனாள்
15.07.2018 — பொதுமுகாமையாளரும் – வலிகிழக்கு
(வ) ப.நோ.கூ.ச. அச்சுவேலி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராச நட்சத்திரம் அரியகுட்டி

பெருமகனார் அமரர் அரியகுட்டியின் 100ஆவது ஆண்டு வரலாறு, நினைவு மலராக வருவது அனைவருக்கும் மகிழ்ச்சிதரும் செயலாகும்.

அமரர் அரியகுட்டி அவர்கள் ஒரு வறிய குடும்பத்தில் பிறந்திருந்தாலும் தனது முயற்சியினாலும், தன்னம்பிக்கையினாலும் பல கோணத்தில் தன்னை வளர்த்துக் கொண்டவர். தந்தையின் மறை வினால் குடும்ப சூழ்நிலை காரணமாக தனது பள்ளிப்படிப்பை இளம் வயதிலேயே நிறுத்த வேண்டி ஏற்பட்டது. இருந்தும் தனது குடும்பத் தொழிலான விவசாயத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் மேலான தொழிலாக நெசவுத் தொழிலிலும் ஈடுபட்டிருந்தார்.

சுயதொழிலில் கூடுதலாக ஈடுபட்டிருந்த வேளையில் சமூக சேவையில் தன்னை இணைத்துக் கொள்ள அன்னாருக்கு அதிக வாய்ப்பு இருந்தது. அதன் நிமிர்த்தம் தான் சார்ந்த சமூக முன்னேற்றத் திற்காக நூல் நிலையம், விளையாட்டுக்கழகம், கலை வளர்ச்சிக்காக கலையகம் போன்றவற்றை ஆரம்பித்து ஸ்தாப தலைவராக இருந்து செயற்பட்டார். அத்துடன் புத்த கலட்டி ஸ்ரீவிஸ்ணு வித்தியாலயம் மற்றும் கூட்டுறவுத் துறையிலும் இணைந்து கொண்டு பல சேவைகளை புரிந்தார்.

பன்முக சேவையில் அமரர் அரியகுட்டி அவர்கள் ஈடுபட்ட தனை கருத்தில் கொண்டு அப் பகுதி மக்கள் 1968ம் ஆண்டு புத்தூர் கிராம சபை உறுப்பினராக தெரிவு செய்து அன்னாரின் தன்னலமற்ற சேவையினை பெற்றுக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சமூகத்திற்கும் மட்டும் சேவையாற்றாது தமிழ் சமூகத் திற்கும் சேவையாற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு அமரர்கள் கோப்பாய் கோமான் வன்னியசிங்கம் பா.உ.,கதிரைவேற்பிள்ளை பா.உ. அவர்களின் சேவைக்கு உரமூட்டி செயற்பட்டார் என்பது கண் கூடு. தமிழரசுக் கட்சி நடாத்திய அறவழிப் போராட்டங்களை கோப்பாய் தொகுதியில் அமரர் சின்னத்துரை அவர் களுடன் இணைந்து முன்னெடுத்தது மட்டுமல்லாது கட்சியின் அடி மட்ட தொண்டனாக இருந்து செயற்பட்டார். அன்னாரின் சமூகத் தொண் டினை கௌரவித்து கனடா ஆவரங்கால் ஒன்றியம் "இராச நட்சத்திரம்" என பட்டம் வழங்கியது. தந்தையின் வழியில் எமது அன்புக்குரிய பரஞ் சோதி அவர்கள் தமிழ் மக்களின் சிறந்த சேவகனாக தன்னை ஈடுபடுத் திக் கொண்டார். அதன் மூலம் வட மாகாண சபை கௌரவ உறுப்பின ராக மக்கள் தெரிவு செய்தனர். தமிழரசுக் கட்சியின் ஐந்து உப தலைவர் களில் ஒருவராக உள்ளார்.

அமரர் அரிய குட்டியின் அவர்களின் 100ஆவது ஆண்டு மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் பெருமை அடைகின்றேன்.

**பெ.கனகசபாபதி**
**பொருளாளர்**
**இலங்கைத் தமிழரசுக் கட்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் ஸ்தாபக தலைவர் அமரர் சி.அரியகுட்டி அவர்கள்

"பொள்ளும் கொடுங்கடற்றங் நுகதன்
முன் உள்ளங் கனிந்தறஞ் செய் துய்கவே"

இறப்பு வருமுன் அறத்தை விரைந்து செய்தல் வேண்டும்.

என்ற நன்னெறியில் வாழ்நாள்வரை ஒழுகி நின்றவர் அமரர் சி.அரியகுட்டி அவர்கள்.

1957 - 1985ம் ஆண்டு காலப்பகுதி புத்தூர் பிரதேச சிறு பான்மைத் தமிழ் மக்களின் கல்விப் புரட்சிக்கு வித்திட்ட காலமாகும். திரு.அரியகுட்டி அவர்களுக்கு அப்போது வயது 39-40 மிகவும் துடிப்பு மிக்க இளைஞனாக சமூகத்தின் விடிவெள்ளியாக பிரகாசித்துக் கொண்டிருந்தார். கோப்பாய் கோமகன் வன்னியசிங்கம் அவர்களின் வலக்கரமாக தமிழரசுக் கட்சியோடு இணைந்து அரசியலிலும் சமூகப் பணியிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

புத்தூர் பிரதேசத்தில், சிறுபான்மைத் தமிழ் பிள்ளைகள் தனித்துவமாகவும் சுதந்திரமாகவும் கல்வி கற்கக்கூடிய பாடசாலை ஒன்றினை நிறுவவேண்டும் என்ற தன் புரட்சிகர எண்ணத்தை நிறைவேற்ற வன்னியனாரின் ஆதரவை பெற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் பாடசாலைகளை நிறுவி சேவையாற்றிக்கொண்டிருந்த சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் ஸ்தாபகர் உயர்திரு இந்துபோட் இராசரத்தினம் அவர்களை, ஊர் பெரியோர் சிலருடன் அணுகி, பாடசாலை நிறுவுவதற்கான அனுசரணை யையும் பெற்றுக்கொண்டார். அரியகுட்டி அவர்கள் இந்துப் போட் இராசரத்தினம் ஆலோசனைப்படி பாடசாலையை நிறுவி நிர்வகிப்பதற் கான கட்டமைப்புள்ள நிர்வாகத்தை சர்வோதயா கலாமன்றம்" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரில் அமைத்து அதன் ஸ்தாபகத் தலைவராக திரு.அரியகுட்டி அவர் கள் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்கள்.

சர்வோதய கலாமன்றத்தின் ஸ்தாபகத் தலைவராக இருந்து மக்களை அரவணைத்து 1957ல் விஜயதசமி தினத்தன்று ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்துக்குரிய அடிக்கல் நாட்டு வைபவத்தினை ஏற்பாடு செய்து, அன்றைய தினத்திலேயே கற்றல் செயற்பாடுகளையும் ஆரம்பித்து வைத்தார்.

1958.01.06ல் தரம் 1-11 வரை வகுப்புக்கள் நடாத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வேளை சர்வோதய கலா மன்றம் பிரதேச ரீதியாக விரிவுபடுத்தப்பட்டது. பிரதேசத்தின் பிரதி நிதிகளாக

அச்சுவேலிக்கு லோயர் செல்லர், ஆவரங்காலுக்கு வதிரி மாணிக்கம் புத்தூர் மேற்கு மருதடிக்கு சிவலையர் புத்தூர் கிழக்குக்கு கோப்பாவோடையச் செல்லப்பு, சங்கடைக்கலட்டி செல்லப்பு, புத்தக லட்டிக்கு, சைவம் தம்பையா, ஆகியோர் நிர்வாகப் பிரதிநிதிகளாகவும் தலைவராக சி.அரியகுட்டியும் செயலாளர்களாக சி.கிருஷ்ணபிள்ளையும் க.கந்தையாவும் பொருளாளராக க.செல்லரும் செயற்பட்டனர்.

பாடசாலையைத் திறம்பட நிர்வகிப்பதற்கு கல்வி நிர்வாகத் துடன் ஈடுபட்டுக் கொண்டிருந்த அல்வாய் க.முருகேசு ஆசிரியர் (இவர் ஸ்ரீவிஷ்ணுவின் முதல் அதிபராக நியமிக்கப்பட்டவர்) கரவெட்டி இரத் தினம் ஆசிரியர், அல்வாய் கவிஞர் செல்லையா ஆசிரியர் அவர்களின் வழிகாட்டலையும் சர்வோதய கலாமன்றம் பெற்று பாடசாலையை திறம்பட நடாத்தியது.

பாடசாலைக்கான பெயர் தெரிவுக்கு பல பெயர்கள் முன்வைக் கப்பட்டபோதும், திருவிளங்கற் சீட்டு மூலம் ஸ்ரீ விஷ்ணு என்ற பெயரே தெரிவானது. யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் என்ற பெய ரோடு பாடசாலை 1958 தை 06ந் திகதி, அல்வாய் திரு.க.முருகேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் அவர்களை தலைமை ஆசிரியராகக் கொண்டு இயங்கத் தொடங்கியது. ஸ்ரீவிஷ்ணு கல்வித் தீபம் பிரகாசமாக சுடர்விடத் தொடங்கியது. மக்கள் மகிழ்ச்சி பொங்க தம் பிள்ளைகளைச் சேர்த்துக் கொண்டனர். 600க்கு மேற்பட்ட மாணவர்கள் ஆரம்ப காலத்திலே இணைந்து படித்துள்ளனர். நல்ல துறைசார்ந்த பாண்டித்தியம் மிக்க ஆசிரியர்களைக் கொண்டும் படித்துத் தகமை பெற்றிருந்த உள்ளூர் இளைஞர்களை ஆசிரியர்களாகக் கொண்டும் இயங்கத் தொடங்கிய தாலே மாணவர் களின் தொகை அதிகரிப்புக்குக் காரணம் என்றும் கூறலாம். ஆரம்பகால ஆசிரியர்களாக:

1. அல்வாய் திரு.க.முருகேசு : பயிற்றப்பட்ட ஆசிரியர் (முதல் அதிபர்)
2. கொற்றாவத்தை பண்டிதர் திரு.க.சீனித்தம்பி : பயிற்றப்பட்ட ஆசிரியர்
3. புத்தூர் வே.இளையகுட்டி : பயிற்சி பெறாத ஆரம்ப ஆசிரியர்
4. ஆவரங்கால் சி.கிருஷ்ணபிள்ளை பயிற்சிபெறாத ஆரம்ப ஆசிரியர்
5. ஆவரங்கால் நா.கணபதிப்பிள்ளை பயிற்சி பெறாத ஆரம்ப ஆசிரியர்
6. ஆவரங்கால் க.முருகுப்பிள்ளை பயிற்சி பெறாத ஆங்கில ஆசிரியர்
7. புத்தூர் செல்வி.கண்மணி பயிற்சி பெறாத ஆரம்ப ஆசிரியர்
8. கரவெட்டி மு.கதிரவேலு (மனோன்மணி) பயிற்சி பெறாத ஆரம்ப ஆசிரியர்
9. கரவெட்டி க.கிருஷ்ணபிள்ளை பயிற்றப்பட்ட கணித ஆசிரியர்
10. யாழ்ப்பாணம் திருமதி.பாக்கியம் பயிற்றப்பட்ட ஆசிரியர்
11. கம்பர்மலை செல்வி.நா.வள்ளிப்பிள்ளை. பயிற்சி பெறாத ஆரம்ப ஆசிரியர்

ஆகியோர் தொடக்ககால ஆசிரியர்களாக பணிபுரிந்தனர். இவ்வாசிரியர்களை நாடி நியமித்து பாடசாலையை திறம்பட நடாத்துவதில் உந்து சக்தியாக விளங்கியவர் திரு.அரியகுட்டி அவர்கள் என்றால் மிகையாகாது. அதிபர் க.முருகேசு சிறந்த அதிபராக நிர்வாகப் பணியில் ஈடுபட்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வூர் மக்கள் பலரின் நிலம் இணைந்ததாக 32 பரப்பு பாடசாலைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளமை பாடசாலையின் தேவையையும் மக்களின் வள்ளல் தன்மையையும் சுட்டுவதாக உள்ளது. இந்த 32 பரப்பு நிலத்தின் ஒருபால் அருளாட்சி புரிந்து கொண்டிருக்கும் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்திற்கும் 2 பரப்பு நிலம் பரிவிடுதல் காட்டி உவந்தளித்து மிகுதி நிலம் பாடசாலைக்கு நன்கொடை ஆதனமாக ஆதார ஆவண மூலம் வழங்க பாடசாலையின் ஸ்தாபகத் தலைவர் திரு.சி.அரியகுட்டி அவர்கள் அரிய பணிபுரிந்துள்ளார்.

அக்காலத்தில் அயற் பாடசாலைகளான புத்தூர் ஸ்ரீசோமாஸ் கந்தா கல்லூரி, ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலயம், ஆவரங்கால் மெ.மி.த.பாடசாலை, (தற்போது மகாஜன வித்தியாலயம்) அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் சுதந்திரமாக கல்வி கற்பதற்கு சாதியின் பெயரால் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. சொல்லொணா துன்பங்கள் தடைகள், காரணமாக கல்விப் பயணத்தை 3ம் 4ம் 5ம் வகுப்புகளுடன், இடைநிறுத்தி படிக்க பாடசாலை இன்றி இருந்தனர். இவ்வேளை ஸ்ரீ விஷ்ணுவின் உதயம் கண்டு உவகை பொங்கிட அனைத்து மாணவர்களும், இடையில் நிறுத்திய மாணவர்களும் கல்வியை ஆரம்பித்துக் கொண்டு விஷ்ணுவில் அனுமதியைப் பெற்று மகிழ்வோடு கற்கத் தொடங்கினர். பாடசாலை நேர வகுப்புடன் பிரத்தியேக வகுப்பாக மாலை நேர வகுப்பு இரவு நேர வகுப்பு என வகுப்புகள் நடைபெற்றன. பாடவிதான, இணை பாடவிதான செயற்பாடுகளான கலைத்திறன் விளையாட்டுத்திறன் போட்டிகள் வட்டார மட்ட நிலைப் போட்டிகளில் புகழ்பூத்த கல்லூரிகளுடன் போட்டியிட்டு முதன் நிலையைப் பெற்று தனியான முத்திரையைப் பதித்து வளர்ந்து வருகின்றது கண்டு, சர்வோதய கலாமன்ற நிர்வாகிகளின் அயராத உழைப்பும் பங்களிப்பும் பிரதி பலிக்கத் தொடங்கியது.

சர்வோதய கலாமன்றத்தின் நிர்வாகத்திற்கு உந்துசக்தியான அனுசரணையாளர்களாக இவ்வூர் பிரமுகர்களான நாரணி அப்பையா, க.ஆறுமுகம், தே.வடிவேலு வைத்திலிங்கம், மற்றும் வ.ஐயாத்துரை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணபிள்ளை, கந்தையா, இளையதம்பி, மாப்பாணர், இன்னும் பலரும் இருந்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

"ஊர்கூட்டி ஒருமுகப்பட்டுச் செய்யும் காரியம் பாழ்போகாது" என்பதற்கு விஷ்ணு வித்தியாலயம் சான்றாக மிளிர்கின்றது.

பாடசாலைக்குத் தேவையான காணி இவ்வூர் மக்களின் இணைந்த நன்கொடையாக பெறப்பட்டது போல பாடசாலைக்கான கட்டிடம் யாவும் இவ்வூர் மக்கள் உவந்தளித்த நிதியைக் கொண்டு கட்டப்பட்டதாகும் மக்களின் சிரமதானப் பணி மகத்தானது.

வித்தியா விருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் ஆரம்பம் முதல் நடைபெற்றுவந்த இப்பாடசாலையை 1961ல், வித்தியாபதியின் (னு.அ.பாடசாலையாக) முகாமைத்துவத்தின் கீழ் அரசு கொண்டுவந்துள்ளது. 1963ல், அரச பாடசாலையாக அங்கீகரிக் கப்பட்டது. அனைத்து ஆசிரியர்களும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற ஆசிரியராக நியமனம் பெற்றனர். 1963ல் க.பொ.த.(சா.த) பரீட்சை யில் விசேட சித்தியோடு அனைத்து மாணவர்களும் தேறியமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

ஐந்தாண்டு காலத்தில் மகோன்னத வளர்ச்சி கண்ட பாடசாலையாக வளர்த்தெடுத்த பெருமை திரு அரியகுட்டியின் தலைமை யிலான சர்வோதய கலாமன்றத்தினதும், அவர்களுக்கு துணையாக நின்ற ஆசிரியர்கள் பெற்றோர்கள் மாணவர்களையே சாரும்.

ஸ்ரீ விஷ்ணு தன் அறிவொளியை புத்தூர் பிரதேசம் மட்டுமன்றி அப்பால் அச்சுவேலி, வசாவிளான், குட்டியப்புலம், அல்வாய் நவக்கிரி பகுதி மாணவர்களுக்கும் பரப்பி வளர்த்தெடுத்தது. கல்வியில், சமயசாரத்தில் சிறந்து வளரும் சமூகம் ஒன்றினை ஸ்ரீ விஷ்ணு உருவாக்கியுள்ளதால், கற்றறிந்தோர் சமூகம் ஒன்று பரிணாம வளர்ச்சிகண்டு வருகிறது. ஸ்ரீ விஷ்ணுவின் மாணவர்கள், உயர்கல்வியை யாழ் மத்திய கல்லூரி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி, சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, யாழ் இந்துக்கல்லூரி இடைகாடு மகாவித்தியாலயம், வசாவிளான் ம.ம.வித்தியாலயம், நெல்லியடி ம.ம.வித்தியாலயம், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரி என நாடிக் கற்று, உயர் பல்கலைக்கழக கல்வியையும் பெற்று பலதுறை விற்பனராகவும் உயர் அரச உத்தியோகங்களிலும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் புகழ் பூத்த பதவிகளிலும் பணிபுரிகின்றனர். மேலும் பல மாணவர்கள் புலம் பெயர்ந்து பல நாடுகளிலும், தொழிலாற்றி செல்வம் மீட்டி தம்ஊர் பொது நிறுவனங்களுக்கு நிதி உதவி, சமூகப் பணியாற்றி வருகின்றனர். இவர்களூடாக விஷ்ணுவின் பெருமை அதன் தேவை உணர்ந்து உழைத்த திரு.சி.அரியகட்டி அவர்களின் தலைமையிலான சர்வோதய கலாமன்றத்தின் அரியனவும் பெரியனவுமான சேவை கலங்கரை விளக்கமாகின்றது.

ஸ்ரீ விஷ்ணுவின் உதய காலத்திற்குமுன் ஆவரங்கால் மு.செல்லத்துரை, புத்தூர் வே.செல்லத்தம்பி, Dr.கி.தவமணி ஆகியோரே அரச உத்தியோகத்தராக இருந்தனர்.

ஸ்ரீ விஷ்ணுவின் உதயத்தின் பின்னர்தான் விஷ்ணுவின் மாணவர் பலர் தொடர்ந்து உயர் கல்வியையும், அரச உத்தியோகங்களையும் பெற்று பாடசாலையின் பெயரையும் தேவையையும் நிலை நாட்டிக் கொண்டுள்ளமை இனிது நோக்கற்பாலது. இந்த வகையில் புகழ்பூத்த மாணவர் வரிசை வருடாவருடம் பெருகி வருகின்றதை பட்டியலிட்டுப் பார்த்தால் நன்கு புலனாகும். விபரம் பின் இணைப்பாக உள்ளது.

உயர் தொகை மாணவர்களை தந்து பெருமையுடன் இள அழகுடன் விளங்கி நிற்கும் ஸ்ரீ விஷ்ணுவின் புகழ் என்றும் மேலோங்க வித்திட்ட ஸ்தாபகத் தலைவர் திரு.அமரர் சி.அரியகுட்டியின் பெருமையும் மங்கா புகழும் நீண்டு நிலைக்கும், அவர்களின் அயராத பணிக்கு விஷ்ணுவின் முத்தான அறுவடைகள், என்றென்றும் காணிக்கையாக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷ்ணு வித்தியாலயம் தந்த சைவநெறி கலை பண்பாட்டு வாழ்க்கை முறை, மேலோங்கியதன் பலாபலனாக, இவ்வூரின் கண் பேரொளியாக அருளாட்சி புரியும் அருள்மிகு புவனேஸ்வரி அம்பாள், அருள்மிகு ஆலடி முருகன், அருள்மிகு கற்பகப்பிள்ளையார், அருள்மிகு ஈஸ்வரன் கோவில்கள் யாவும் விஷ்ணுவின் மாணவச் செல்வங்களின் நெறியாயுகைப் பேரூற்றின் வெளிப்பாடாகும். இந்த வகையினஸ்ரீவிஷ்னு இப்பிரதேசத்தின் அறவொளி வீசும் சமுதாயக் கண்ணாடி என்றால் மிகையாகாது. இந்த மறுமலர்ச்சியை ஏற்படுத்த திரு அரியகுட்டி அவர்களின் தலைமையில் வளர்ந்து நின்ற சர்வோதயகலா மன்றத்தின் தீர்க்கதரிசனச் சேவை என்று கூறி பெருமை கொள்ளலாம்.

மேலும் திரு அரியகுட்டி அவர்கள் இளஞாயிறு போல என்றும் விடாமுயற்சியும், தற்துணியும், பல்துறைசார் தொழில் திறனும் செல்வம் பெருக்கி உறவு தழுவி வாழ்ந்திட காரணத்தினால், தான் சார்ந்த சமூகம் வாழ, சேவையாற்ற வேண்டும் என்ற உணவு மேலோங்கப் பெற்று அதன் வழி வாழ்ந்து காட்டிச் சென்றுள்ளார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று" (வள்ளுவர்)

ஸ்ரீ விஷ்னு வித்தியாலயத்தின் அதிபர் என்ற முறையில் பாடசாலை பதிவுகளிலிருந்தும் நினைவுபடுத்தல் குறிப்புகளிலிருந்தும் நினைவுபடுத்தல் குறிப்புகளிலிருந்தும் இச் செய்தியை வழாங்குவதில் மகிழ்ச்சி உறுகிறேன். இதிலும் சில தவறுகள் ஏற்பட்டிருக்கலாம் அதற்காக உரியவர்கள் மன்னிப்பார்கள் என நம்புகிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

**நா.சிவஞானம் (B.A.DIP in Edu)**
**sp Trained**
**அதிபர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது வாழ்விலும் அரசியலிலும் நேர்மை, நிதானம் உடையவர்

அமரர் சி.அரியகுட்டி அவர்களை எனது இளமைக்காலத்தில் இருந்து எனக்கு நன்கு தெரியும் 1958ம் ஆண்டு புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டபோது அதனை நிர்வகிக்கும் ஓர் அமைப்பாக "சர்வோதய கலா மன்றம்" என்னும் பெயரில் ஒரு சபை தோற்றுவிக்கப்பட்டது. அதன் தலைவராக அமரர் சி.அரியகுட்டி அவர் களும், செயலாளராக நானும் தெரிவுசெய்யப்பட்டு பாடசாலை நிர்வா கத்தையும் ஏனைய செயற்பாடுகளையும் முன்னெடுத்து வந்தோம்.

அன்றைய காலகட்டத்தில் பாடசாலைகள் நிர்வாக அமைப் பில் அரச பாடசாலைகள், அரச உதவி நன்கொடை பெறும் பாடசாலை கள் என இரு பிரிவுகளாக பாடசாலைகள் இயங்கிவந்தன.

ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தில் நிர்வாகம் சைவவித்தியா வித்திச் சங்க முகாமைத்துவத்திட்டம் ஒப்படைக்கப்பட்டபடியினால் உதவி நன்கொடை பெறும் பாடசாலை என்ற விதிமுறையின் கீழ் பாடசாலை கட்டிடம் அமைக்கும் பாரிய பொறுப்பும் கிராம மக்களே பொறுப்பேற்க வேண்டியதாயிற்று.

அன்றைய எமது மக்களின் பொருளாதார நிலை மிகவும் பின்னடைவில் இருந்த போதிலும் அமரர் சி.அரியகுட்டி அவர்கள் தலைமைத்துவப் பண்போடு கிராம மக்கள் முன்சென்று மிகச் சாதுரிய மான முறையில் பணம் சேகரித்து மிகவியக்கத்தக்க வகையில் பாட சாலைக் கட்டிடத்தைக்கட்டி முடித்தமை ஒரு பெறுமதிமிக்க செயற் பாடாக அந்நாளில் பலராலும் பாராட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மனத்தில் பட்ட கருத்தினை துணிச்சலுடன் தெளிவாக உறுதியாக ஆனால் அமைதியாக எடுத்துரைக்கும் நியாயப்படுத்தும் தன்மையும், வாதிக்கும் திறமையும் எடுத்த கருமம் எதனையும் திறமையாகச் செய்து முடிக்கும் ஆற்றலும், நேர்மையும், நிதானமும், எல்லாவற்றுக்கும் மேலாக மனித அனுதாபமும், பண நற்பண்புகளும் மனித நல்லியல்புகளும் அவரிடம் நிறைய இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பொதுவாழ்வில் மட்டுமல்ல, அரசியலிலும் அமரர் சி.அரிய குட்டி அவர்கள் நேர்மையும் நிதானமும் உள்ள ஒருவராகவே திகழ்ந் தார். இதற்கு உதாரணமாக ஒரு முக்கிய விடயத்தை இங்கு குறிப்பிடலாம்.

தமிழரசுக்கட்சியின் தீவிர ஆதரவாளராகத் திகழ்ந்த அமரர் 1968ஆண்டில் புத்தூர் கிராம சபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப் பட்டார். 1970ம் ஆண்டு கிராம சபையில் தலைவராக இருந்த புத்தூர் பிரமுகர் ஒருவர் பதவியை இராஜினாமாச் செய்ததன் காரணமாக அவ்வெற்றிடத்துக்கு புதிய தலைவர் தேர்தல் நடாத்தப்படவேண்டி இருந்தது.

அன்றைய கால கட்டத்தில் இருபெரும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் இருவர் தலைமைப் பதவிக்கு போட்டி யிட்டார்கள்.

அமரர் திரு.அரியகுட்டி அவர்கள் தமிழரசுக்கட்சி பிரமுகர் களையே ஆதரித்தார். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் புத்தூர் கிராமசபை அலுவலகத்தில் தலைவர் தெரிவிற்கான கூட்டம் கூட்டப் பட்ட போது தமிழரசுக்கட்சிப் பிரமுகருக்கே வெற்றிபெறும் வாய்ப்பு இருந்தது. ஆனால் எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் கூட்டத்தைப் பகிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரித்து கோரம் இல்லாமல் செய்ததன் காரணமாக ஆணையாளரால் திட்டமிட்டபடி கூட்டத்தை நடாத்தி தலைவரைத் தெரிவுசெய்ய முடியவில்லை.

சில வாரங்கள் கழித்து இரண்டாவது தடவை தலைவர் தெரிவுக்கான கூட்டம் கூட்டப்பட்டது. அன்றைய தினம் உறுப்பினர்கள் ஒரு சிலர் திசை மாறியபடியால் தமிழ் காங்கிரஸ் பிரமுகருக்கு வெற்றி பெறும் வாய்ப்பு இருந்தது. தமிழரசுப் பிரமுகர் சார்பான உறுப்பினர்கள் கூட்டத்தைப் பகிஸ்கரித்து கோரம் இல்லாமல் செய்தபடியால் அன்றைய தினமும் தலைவரைத் தெரிவுசெய்து முடியவில்லை.

இதனால் விரக்தி அடைந்த உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் கிராம சபையின் நிர்வாகத்தை கலைக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். அமரர் அரியகுட்டி அவர்களும் இதனை அறிந்து விட்டார்.

அன்றைய காலகட்டத்தில் நான் யாழ் தேர்தல் திணைக் களத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தேன். அமரர் சி.அரியகுட்டி அவர் கள் என்னைச் சந்தித்து "வீணாக ஏன் சபையைக் கலைக்க வேண் டும். யாராவது ஒருவர் தலைவராக வரட்டும். கிராமசபை அலுவலகத் தில் கூட்டத்தைக் கூட்டாது செயலகத்தில் உதவி ஆணை யாளர் தனது அலுவலகத்தில் கூட்டத்தைக் கூட்டி தலைவரை தெரிவு செய்யட்டும் நீங்கள் இந்தப் பொறுப்பை ஏற்று உதவி ஆணையாளருடன் பேசி செயற்படுத்துங்கள் என்றார்.

அமரரின் பேச்சு எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. இது நடக்கக்கூடிய காரியமா? என்று எனக்குள் சிந்தித்தேன்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளரை அவரது வீட்டில் சந்தித்து அமரர் அரியகுட்டி அவர்கள் கூறிய வழிமுறைகளை முன்னிலைப்படுத்தினேன். செயலக அலுவலகத்தில் கூட்டம் நடத்துவதில் உள்ள சாதகமான விடயங்களையும் கூறினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சொன்னார் "நான் ஏற்கனவே சபையைக் கலைக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன் என்றும் நீங்கள் முன் வைத்துள்ள வழிமுறைகளை ஆலோசனைகளுக்கு எடுத்து இரு தினங்களில் உங்களுக்கு முடிவு சொல்லுகிறேன்" என்றார்.

பின்னர் எங்கள் ஆலோசனைப்படி இறுதியாக மூன்றாவது தடவை தலைவர் தெரிவுக்கான கூட்டத்தை செயலகத்தில் தனது அலுவலகத்தில் நடத்துவதற்கு உதவி ஆணையாளர் சம்மதித்தார்.

மூன்று வாரங்களின் பின்னர் உறுப்பினர்கள் அனைவரும் செயலக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டார்.

தமிழ் காங்கிரஸ் பிரமுகர் ஒரு சில வாக்குகளால் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். விடயம் மிகச் சுமூகமாக முடிந்தது.

தலைவர் தேர்தலில் பலர் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு அணி மாறியபோதும் திசைமாறிய போதும் அமரர் அரியகுட்டி அவர்கள் இறுதிவரையும் தான் நிறைவு நிலையில் ஒரே திசையில் நின்றார். தமிழரசுப் பிரமுகர்களையே ஆதரித்தார்.

இது பொதுவாழ்வில் மட்டுமல்ல அரசியலிலும் நேர்மை நிதானம் உடைய பொருளாக அவர் வாழ்ந்தார் என்பதை எடுத்துக் காட்டுவதற்கு ஒரு சாதனையாகும். இத்தகைய ஒருவரது மறைவு சகலருக்கும் பேரிழப்பேயாகும். அன்னாரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**"மாசில் அகம்"**
**ஆவரங்கால்**

**சி.கிருஷ்ணபிள்ளை**
**சமாதான நீதவான்**
**ஓய்வுபெற்ற அரச நிர்வாக அலுவலர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபிரசுரம்

# செய் நன்றி மறவா சிந்தனைத்துளிகள்

அமரர் எனது ஒன்று விட்ட அண்ணர்
எனது வாழ்வின் அத்திவாரம்
வறுமையில் உழன்ற என் சிறுவயதில்
பயிர் செய்ய நிலம் தந்து. முதலும் தந்து
விவசாயக் கருவி தந்து
துலாவேறல் முதற் கொண்டு தோட்டத்
தொழில் நுட்பம் யாவையும் சொல்லித் தந்து
பள்ளி செல்ல கல்வி உபகரணம் தந்து
பலவகையில் நானுயர வழி செய்த நிகழ்வெல்லாம்
நிழற்படமாய் மனத்திரையில் தெரிகிறது.
பொது வாழ்வில் அவர் செய்த பலதுறைச் சேவைகள்
உறவினன் நான் உரைத்திடல் உசிதமல்ல ஆனாலும் சிலவரிகள்
கறைபடியாக் கரம் கொண்ட தலைமைப் பண்பும்
அலைபாய்ந்து சலுகைக்காய் அலையாத
நிலையான அரசியல் நெறிவாழ்வும்
ஊரறியும். உயர்ந்து நிற்கும் தாபனங்கள் சான்று சொல்லும்
அவர் ஆன்மா சாந்தி பெற அரனாரின்
திருவடியை அஞ்சலிப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஸ்ரீரஞ்சனி,** அமரர் வே.இளையகுட்டி குடும்பம்
**மணற்பகுதி,**
**புத்தூர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபிரசுரம்

# அனைத்தும் நிறைந்தவர் அமரர் குட்டி

செந்தமிழ் வீரம் மிகச்செறிந்திடும் புத்தூர் மண்ணில் நல்ல முற்போக்குச் சிந்தனையோடு வாழ்ந்த சிறப்பினை உடையானாகி மக் கள் வந்தனை செய்ய வாழ்ந்த மாபெரும் மனிதர் அமரர். திரு.சி.அரிய குட்டி என்னும் பெருமை பெறுவர் என்பதற்கு சிறந்த உதாரண புருஷனாக இவர் வாழ்ந்து வந்தார்.

இவர் மருதமும், நெய்தலும் மயங்கும் நிலமுடைய புத்தூரிலே மணற்பகுதி எனும் சிற்றூரில் பாரம்பரிய சைவநெறி முறைகளை அனுசரித்து வாழ்ந்து வந்த ஒரு மூத்த பிரஜையாவார். சிறந்த தூப தீபமாகத் திகழும் புவனேஸ்வரித் தாயானவள் காக்கும் மணற்பகுதி மண்ணிலே மாண்புற ஓங்கி மகிழ்வோடு வாழ்ந்த சிறந்த சமூக சேவை யாளன்.

ஒரு சமூகத்தை விழிப்படையச் செய்யவும் முற்போக்குச் சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுக்குமளவிற்கு திருப்தி அளிக்கக் கூடியதுமான கல்வியைப் பெற்றிருந்தார். கல்வியிலே தான் சிறந்து விளங்க வேண்டுமென்ற ஆர்வமிருந்தும் அவருக்கு அன்றைய சூழல் சாதகமாய் அமைந்திருக்கவில்லை. அதனால் தான் தன்னால் இயலா மல் போன கல்வியை தன் சமூக மக்கள் கற்று மகிழ இச்சை கிரியா ஞானம் ஆகியவற்றினைப் பயன்படுத்தி உதவிகன் பலவற்றைச் செய்தார். தன்னால் முடியாது போனதை தன் சமூகத்தின் புறக்கண்டு இன்புற்றார்.

இவரது வாழ்க்கைக்குள் ஒரு மனிதம் எப்படி தான் சார்ந்த சமுதாயத்தை முன்னேற்றப் பிரச்சனைகளைச் சந்தித்தது என்ற பெரிய வரலாறே புதைந்திருக்கின்றது. அமரர் அவர்களின் உடலிற்கு மட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

86 வயது. உள்ளத்தின் மகிமைக்கோ அதை விட அதிக வயது. ஆழு வேரூன்றி அகலக் கிளைபரப்பிய குடும்பப் பின்னணியைக் கொண்டவ ரென்பதால் மட்டுமன்றி பரந்த மனப்பான்மையினாலும் பரோபகாரி என்பதினாலும் எல்லோர் மரணச்சடங்கின் போது வந்திருந்தவர்களின் எண்ணிக்கையை நேரில் கண்டிருந்தவர்கள் இதனை உணர்ந் திருப்பர். (The Crowd was an Ample Testinony)

அமரர் அவர்களுக்கு 04 ஆண்பிள்ளைகள். 04 பெண் பிள்ளைகள். வாழ்க்கைக்கு பசுமைதேடி வெளிநாடு சென்ற ஆண்மக் களால் அன்னாரின் குடும்ப பொருளாதாரம் அதிசிறப்புற்றது. பிள்ளை களை நன்னெறிப்படுத்தி தமிழர் பண்பாட்டிற்கமைய சைவமும், தமிழும் தழைத்தோங்கும் நல்லூர், அரியாலை, அல்வாய், புத்தூர் போன்ற இடங்களில் திருமணம் செய்து கொடுத்து சிறப்பான வாழ்க்கை அமைத்துக் கொடுத்த வகையில் நிறைவடைந்தார். ஆலம் விழு தெனவே உறவு ஆயிரம் வந்த போதும் அமரரின் மனைவியார் தெய் வானை வாழும் காலம் வரை வேரெனவே இருந்து பதிசேவை புரிந்தார்.

பல்துறைகளிலும் ஆற்றல் பெற்றிருந்த போதிலும் தனது சீவனோ பாயமாக விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண் டிருந்த அமரர் தனது உழைப்பிலே ஓய்வின்மை, பண்ணிபிலே சால்பு டமை வாழ்க்கையிலே எளிமை என்பற்றைக் கடைப்பிடித்து வாழ்ந்தார்.

அரச காரியங்களிற்கோ தலைவர்களைச் சந்திப்பதற்கோ செல்வதாயின் தமிழரின் தேசிய உடையணிந்து மிக எடுப்பாகச் செல் வார். தமிழ் தேசிய நலன்களில் மிக அக்கறையுடன் பங்கெடுத்து கரும மாற்றி வந்தவர். அரச பணிமனைகளில் நீண்ட காற்சட்டையும் ஷேர்ட் டும் அணிந்து பணிபுரிந்து வந்த உத்தியோகத்தர்கள் கூட தேசிய உடை யில் இவரைக் காணும் போது புருவத்தை உயர்த்தி புதுமையாய்ப் பார்த்தனர். புத்துணர்வும் பெற்றனர் பலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ்ந்த அமரர் வறியவர் களை எண்ணி உதவத் தவறவுமில்லை. இன்றும் கூட இவரது நிழலிலே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் பலர் எமது சிற்றூரிலே இருக் கின்றனர். அமரர் ஆற்றிய அளப்பரிய சேவைகளில் சிலவற்றை நாம் மனதிற் கொள்வது பொருத்தமானதெனக் கருதுகின்றேன்.

1957ம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் எமது ஊரில் பள்ளிக் கூடம் இருக்கவில்லை. எமது சமூகத்துப் பிள்ளைகளுக்கு பரந்து இருந்த எமது சமூகத்து ஆசிரியர்களைக் கொண்டே கல்வி புகட்டப்பட்டால் எமது நல்லெண்ணத்தில் ஸ்ரீ விஷ்னு வித்தியாலயத் தைக் கட்டியெழுப்ப அரும்பாடுபட்டார். பாடசாலைகள் இருப்பதைக் காரணம் காட்டி எமது சமூக மக்களுக்கென இச்சிற்றூரிலே பாடசாலை ஒன்றை நிறுவுவதற்கு பலத்த எதிர்ப்புக்கள் எழுந்தன. கல்வி அதிகாரிகளின் விதிகளும் சற்று கடினமாகவே இருந்தன. குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள மாணவர் களின் வரவு காட்டப்பட்டாலே பாடசாலையை நிறுவி உத்தியோகபூர்வ அங்கீகாரமும் வழங்கப்படும் என்ற நிபந்தனை அமரரினதும் அவரு டன் இணைந்து செயற்பட்டோருக்கும் வேம்பாய் கசந்தது. இருந்த போதும் அமரர் பின் வாங்கவில்லை. மேலும் பலருடன் இணைந்து மெய்வருத்தம் பாராது கண்துஞ்சாது வீடுவீடாகச் சென்று எமது மக்களுக்கு விளக்கம் கொடுத்து அதிகளவு பிள்ளைகளைக் கொண்டு வந்து பாடசாலைக்குச் சேர்ப்பித்தார். பாடசாலையும் இயங்கியது. அங்கீ காரமும் பெறப்பட்டது. இது அமரரின் விடாமுயற்சியையும், சமூக வளர்ச் சியில் அவருக்கு இருந்த அக்கறையும் எடுத்துக்காட்ட வல்ல சம்பவங்களே.

இன்று இந்தப் பாடசாலையிலே கல்வி கற்ற பலர் நல் ஆசான் களாகவும், அதிபர்களாகவும், எண்பரிசோதகர்களாகவும், கணக்காய் வாளர்களாகவும், எழுத்தாளர்களாகவும், ஆன்மீகத் துறையில் ஆர்வலர்களாகவும் மிளிர்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1947 களில் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்ந்த எமது ஊர் மக்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்து வதற்காகவும், பனை வளம் பெருக்கின் மனைவளம் சிறக்கும் என்ற கூற்றிற்கிணங்கவும் எமது கிராம மக்கள் மத்தியில் காலம் சென்ற திரு.நாராயணன் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் காலம் சென்ற இராசம்மா அவர்களின் கைவினைத்திறனின் பயனைப் பெற்று அரச நிறுவனங்களின் அனுசரனையுடன் பன்ன வேலையில் பெண்களை ஈடுபடுத்தி பனம் பொருட்களின் கலையை ஊக்குவித்தவர்களுக்குள் அமரர் சி.அரியகுட்டியும் பெரும் பங்கு வகித்தார்.

காலப்போக்கில் இந்த கைத்தறி குடிசைகள் தோறும் வியா பித்தது. மக்களின் ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கு சீவனோ பாயமாகவும் மாறி பொருளாதார நலன்களைப் பெற்றுக் கொடுத்தது.

சமகாலத்திலே தானட கைத்தறித் தொழிலுக்காகப் போடப் பட்டிருந்த கொட்டிலின் ஒரு புறமாக சனசமூக நிலையம் ஸ்தாபிக் கப்பட்டது. 1947இல் ஆரம்பிக்கப்பட்ட இச் சனசமூக நிலையத்தினி லிருந்து பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூலமே இச்சிற்றூர் மக்கள் பொது விடயங்களையும் கூட்டுறவின் மகிமையையும் நாட்டு நிலைமை களையும் அறிந்து வந்தனர். கால ஓட்டத்தில் "கலையகம்" என்ற பெயர் பெற்று சிறப்புற இயற்கி வந்தது. பின்னர் இந்த கலையத் திற்கு நிரந்தரக் கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கான நிலத்தை அமரர் அவர்களே அன்பளிப்புச் செய்து ஊக்குவித்தார் என்பது மறக்கப்பட முடியாதது. அதன் பின்னர் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மக்கள் இடப்பெயர்வுகள் அடிக்கடி நடைபெற்றிருந்தும் வெளிநாட்டு இளைஞர்களின் பேராதரவால் நிதி அதிகம் கிடைக்கப் பெற்று "கலைய கம்" எதிர்பாராத வளர்ச்சி கண்டு இரட்டை மாடிக் கட்டடமாக உயர்ந்து வளர்ந்து வருகின்றது. கலையகத்தினால் நிருவகிக்கப்படும் "வீனஸ் ஸ்போட்ஸ் கிளப்" பின் ஸ்தாபக அங்கத்தவர்களுள் அமரர் அரிய குட்டியம் ஒருவர் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையகம் ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலேயே வீனஸ் விளை யாட்டுக் கழகமும் ஆரம்பமானது. கிட்டத்தட்ட 1947 -1957 ஆண்டு காலப்பகுதி வரை வீனஸ் விளையாட்டுக்கழகத்தின் தலைவராய் இருந் தவர். பயிற்விப் பாளர்களைக் கொண்டு வீரர்களைப் பயிற்றுவித்து கரப் பந்தாட்டப் போட்டிகள் பலவற்றில் கரணவாய், அரியாலை, கோப்பாய், யாழ்ப்பாணம் போன்ற பல இடங்களில் விளையாடி வெற்றியீட்டிக் கொடுத்து வீனஸ் விளையாட்டுக்கழகம் பிரபல்யமடைய காரணியாய் இருந்தனர்.

சிறந்த கரப்பந்தாட்ட விரர் திரு.வே.மாசிலாமணி அவர்கள் அமரரின் கரப்பந்தாட்ட விளையாட்டுச் சிறப்பை 1963ல் கோப்பாயில் ஸ்ரீலங்கா பொலிஸ் நிலைய பொறுப்பாளராயிருந்த திரு.தென்னக்கோ அவர்கள் கண்டு வியந்து பாராட்டியதாக என்னிடம் ஒரு தடவை தெரிவித்தி ருந்ததை இங்கு நினைவு கூறுகின்றேன். அமரரினால் பிரபல்யப் படுத்தப்பட்ட வீனஸ் கழகத்தின் பெயர், புகழ், இன்றைய இளைஞர் களால்தக்க வைக்கப்பட்டு வருகின்றமை அமரருக்கு பெருமை சேர்கிறது.

புதுவை மணற்பகுதி புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்திற்கு தேவையென பூசகர்களால் நீண்டகாலமாக உணரப்பட்டு வந்த "மடைப் பள்ளி" நிர்மாணம் அன்பளிப்பாகச் செய்து கொடுத்தவரும் அமரரே. ஆன்மீக நெறிகளில் ஆழ்ந்த நம்பிக்கையுடன் அனுட்டானங்களையும் அனுசரித்து சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நடாத்தி வாழ்வில் நிறைவு கண்டவர். இவற்றை விட அன்னாரின் சேவைப்பட்டியல் போட்டுக் காட்டுவதனால்.

1. ஆவரங்கால் கிராம அபிவிருத்திச்ச சங்க - உபதலைவர்
2. அச்சுவேலி தெற்கு பனம் பொருள் அபிவிருத்திச்சங்க - உபதலைவர்
3. ஆவரங்கால் கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்ககிளை - தலைவர்
4. தமிழரசுக்கட்சி ஆவரங்கால் கிளை - உபதலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. புதுவை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய ஸ்தாபகர் - தலைவர் என நீண்டு கொண்டே போகும். அனைத்தும் சமூக நலன் கருதியே செய்யப் பட்டன. அவற்றை ஒவ்வொன்றாக விபரிப்பதென்பது காலங்கருதி இங்கு தவிர்க்கப் படுகின்றது.

இவ்வாறாக சமூக வளர்ச்சிக்கான முக்கிய பொறுப்புக்களை ஏற்று வியத்தகு சேவையாற்றிய அமரருக்கு நன்றியாக எமது ஊர் மக்கள் புத்தூர் கிராம சபைத் தேர்தலில் வாக்களித்து ஜனநாயக ரீதியில் கிராம சபையின் உபதலைவராகத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தனர். மக் களின் நம்பிக்கையையும், கிராம ஆட்சி செலுத்திய ஒரு சிறந்த மனிதர் அரசியல் வாதிகளாலும் பெரிதும் மதிக்கப்பட்டவர்.

"ஊருக்கு உண்மைகள் கூறி இனியன செய்தல்
நற்றவம் ஆவது கண்டவர்." - அமரர் அரிய குட்டி அவர்கள்.

ஒருவன் தன் வாழ்வினால் மற்றவர் நன்மையுடைந்தார் என்ற நிறைவுடன் வாழ்வதே நிறைவான வாழ்கை என ஈ.வே.ரா.கூறியது என் ஞாபகத்திற்கு இப்பொழுது வருவது இங்கு பொருத்தமாகவே தெரிகிறது. அமரரும் நிறைவான வாழ்வை அனுபவித்து 04.03.2017 இறைபதம் அடைந்தார். புழுதியாய்க் கிடந்த புரியாமை முழுவதையும் புலம் பெயர வைத்து சமூகத்தில் புத்துணர்வை ஊட்ட இவர் புரிந்த பணிகளை நாம் மறப்போமா?

இன்று இவர் பாதச் சுவடுகள் படும் பாக்கியமிழந்து பரிதவிக் கின்றோம்.

**பெறாமகன்**
**அமரர் சி.குணரத்தினம்**
**(சட்ட இளமாணி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபிரசுரம்

# ஊர் போற்றும் உற்ற நண்பன்

அமரர் சிலை அரியகுட்டி அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தியை இலண்டன் I.B.C வானொலியில் கேட்டவுடன் மிகவும் சஞ்சலப்பட்டேன் உடன் அவரின் மகனுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்ட பொழுது அவர் ஊருக்குப் போய்விட்டதாக அவரது மனைவி கூறினார். அவருக்கு எனது அஞ்சலியைத் தெரிவிக்குமாறு வேண்டி னேன். அரியகுட்டி அவர்கள் எனது வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு மனிதர்.

அவரை நினைக்கும் பொழுது 1947, 48 ம் ஆண்டுப் பகுதியில் ஒரு சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ்ந்தார். கரப்பந்தாட்டத்திற்கு தலைமை தாங்கி சென்ற இடமெல்லாம் வெற்றி வாகை சூடி கிராமத் திற்குப் பெருமை தேடித் தந்தார். தமிழரசுக் கட்சி ஆரம்பித்த காலத்தில் அமரர் வன்னியசிங்கம் அவர்களின் வெற்றிக்கு மணற்பகுதி தற்போது ஆவரங்கால் கிழக்கு மக்கள் பெரும் பங்காற்றினார்கள் அதற்கு உழைத்த முன்னோடிகள் அமரரும் ஒருவராக விளங்கினார்.

தமிழரசுக் கட்சி நடத்திய சாதவீகப் போராட்டங்களுக்கெல்லாம் உதவிய பெருந்தகை. புத்தூர் கிராமசபை தேர்தலிலே பங்குபற்றுவ தென்று நான் எண்ணியிராத வேளையில் மணற்பகுதியில் முக்கிய மான ஒரு சிலருடன் வந்து என்னை தேர்தலிலே பங்கு கொள்ள வைத்து எனது தேர்தல் நியமனப் பத்திரத்தில் கையொப்பமிட்டவர்கள் இருவர். ஒருவர் சி. அரியகுட்டி மற்றவர் சண்முகம் குமாரதாஸ் இவர்கள் என்றும் நினைவில் இருப்பவர்கள்.

பத்தூர் கிராம சபைத் தேர்தலில் தொடர்ந்து பல முறை வெற்றி பெற முன்னோடிகளில் ஒருவராக இருந்தவர். புதிய வட்டாரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த பொழுது ஆவரங்கால் கிழக்கு வட்டாரத்துக்கு தமிழரசுக் கட்சிப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்ட முதல் பிரதிநிதியாக இருந்து பல சேவைகளை என்னோடு ஒன்றுபட்டு சேவை செய்த ஒரு சிறந்த சமூக சேவையாளர். கலையகம் சனசமூக நிலையம் , விஷ்ணு வித்தியால யம், ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோவில், வீனஸ் விளையாட்டுக்கழகம் ஆகியவை ஆரம்பமாவதற்கு முன்னோடியாகவும் இருந்த ஒரு சிறந்த சிந்தனையாளர். நான் அவரைச் சென்ற 2003 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12 ம் திகதி அவரின் இல்லம் சென்று பார்த்து உறவாடியது எனக்கு மிகுந்த திருப்தியைத் தருகின்றது.

அவர் எப்பொழுதும் நல்ல பக்கத்தையயே பார்த்தவர். ஒரு திட்டம் ஒழுங்குமுறை, நேர்த்தியான பணி , தொழில் சார்ந்த பணிவு, நட்புணர்வு , மதிக்கும் தன்மை, பொறுப்புணர்வு, எதிலும் நிறைவைத் தேடி நிறைந்தவர். அவர் வாழ்க்கையிலே விட்டுச் சென்ற எச்சங்கள் அவரின் பிள்ளைகள், வாரிசுகள் வளமுடன் வாழ தான் பெற்ற இன்பம் பெறுக என வாழ்த்திச் சென்றார் பரமனடிக்கு.

அவரது ஆன்மா சென்றடையும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை யும் அமரரின் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !!!

**63, Lawerence Road,**
**East HAM, London- E.6 IjN**
**U.K**
**01.04.2004**

**அமரர்**
**க.சின்னத்துரை**
**கனிட உபதலைவர்**
**தமிழர் விடுதலைக் கூட்டணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷ்ணு மான்மியம்

ஸ்ரீ விஷ்ணுவின் மாணவர்களில் ஆண்கள் வரிசையில் திரு.பெ.தம்பிராசா கணக்காய்வு அத்தியட்சகர் யாழ் மாவட்ட செயலகம் அவர்களும் பெண்கள் வரிசையில் நாராணி செல்லப்பாக்கியம் பொருளியல் ஆசிரியை அவர்களுக்கும் முதலாவது பல்கலைக்கழக பட்டதாரிகள் என்ற பெருமையைப் பெறுவதுடன் பின்நாளில் பல பட்டதாரி மாணவர்கள் தோற்றம் பெற இராசிமிக்க விஷ்ணுவின் மாணவர்களா கவும் திகழ்கின்றார்கள். இவர்களைத் தொடர்ந்து பட்டதாரிகளாக.

நா.சிவஞானம் - ஸ்ரீ விஷ்ணுவின் அதிபர்

சி.பத்மலிங்கம் - பல்கலைக்கழகம் - விரிவுரையாளர் - சங்கீதம்

க.இரத்தினம் - பல்கலைக்கழகம் - விரிவுரையாளர் - வர்த்தகம்

செ.அகிஸ்பரன் - பல்கலைக்கழகம் - விரிவுரையாளர் - கணிதம்

சி.குணரத்தினம் சட்டக்கல்லூரி - விரிவுரையாளர் - சட்டம்

கி.சுப்பிரமணியம் கணக்காளர் - (நியூசிலாந்து)

க.சின்னராசா - வங்கி உதவி முகாமையாளர்

ஜ.பராபரம் - வங்கி முகாமையாளர்

சி.இதயதீபன் J.P - அரசமுகாமைத்துவ உதவியாளர்.

ந.லோகிதன் (கனடா)

த.கௌசியா - அரசமுகாமைத்துவ உதவியாளர்

லோ.பகீரா - அரசமுகாமைத்துவ உதவியாளர் (சுவீஸ்)

சி.சர்மிளா - அரசமுகாமைத்துவ உதவியாளர்

சி.கேமலன் - அரசமுகாமைத்துவ உதவியாளர்

சி.வித்தியாபதி - கிராமசேவையாளர்

மு.சந்திரசேகரம் - சேவைக்கால ஆலோசகர் - தமிழ்

ஜ.பகவதியம்மா - ஆசிரியை - தமிழ்

த.தயாளன் - ஆசிரியர் -கணிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.சபேசன் - வைத்தியகலாநிதி (கனடா)

த.வாகீசன் - ஆசிரியர் - வர்த்தகம்

செ.அமுதினி - சங்கீதம் (கனடா)

ந.புவிதா - சங்கீதம் (லண்டன்)

செ.தசோதரன் - ஆசிரியர் - கணிதம்

இ.குந்தவி ஆசிரியை - தமிழ்

த.தார்மீகன். - ஆசிரியர் சித்திரமும் வடிவமைப்பு

அ.யசோதா - ஆசிரியை - விஞ்ஞானம்

ப.சங்கீதா - ஆசிரியை - சங்கீதம்

இ.சாரங்கன் - ஆசிரியர் - தமிழ்

நிர்மலன் - ஆசிரியர் - விஞ்ஞானம்

கு.சுந்தரச் செல்வன் - ஆசிரியர் - கணிதம்

மு.இராஜவரோதயம் - அதிபர்

க.பத்மநாதன் - அதிபர்

மு.இந்திரோதயன் - பொறியியலாளர் (ரு.மு)

த.கேசவன் - தொழிநுட்பவியலாளன்

ந.பாமா - ஆசிரியை மனையியல் (பயிற்றப்பட்டவர்)

**கல்வியற் கல்லூரி பயிற்சி பெற்ற ஆசிரியர்களாக**

த.கௌசல்யா - பொது (லண்டன்)

பா.சுமைலியா - சங்கீதம்

த.நிஷாந்தன் - கணிதம்

க.துவாரகன் - பொது

ப.சுரேன் - பொது

தி.கவிதறஜனி - தமிழ்

மு.ஜங்கரன் - நாடகமும் அரங்கியலும்

சி.சாரங்கி - சங்கீதம் புதிய நியமன ஆசிரியை 2018

மு.பார்த்தீபா - பொது புதிய நியமனம ஆசிரியை 2018

ஆ.ஜெகசோதி - அதிபர் கங்கீதாலயா ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பிரகலாதன் - கணனி வடிவமைப்பு - டிப்ளோமா பட்டதாரி

க.பிரசாந்தன் - ஆங்கில டிப்ளோமா பட்டதாரி - Data manager

த.கஸ்தூரி - C.D.O கூட்டுறவுத்துறை

க.காண்டீபன் ஆசிரியர் யாழ்.பல்கலைக்கழக டிப்ளோமாப்பட்டதாரி

பு.கபிலா - யாழ்.பல்கலைக்கழக I.T டிப்ளோமாப் பட்டதாரி

த.செந்தூரன் - பொறியியல் பட்டதாரி கொமினிக்கேசன்

சிறில் ஜெசிந்தா - நித்த மருத்துவர் (அமெரிக்கா)

செ.சோதீஸ்வரன் - தமிழ்ப்பண்டிதர் - அசிரியர்.

செ.றஜிவர்மன் - ஊடகவியலாளர் டிப்ளோமா - யாழ்.ப.கழகம்

தெ.மேர்ஷி - யாழ்.ப.கழகம் மாணவி

பு.மிதுஷா - யாழ்.ப.கழக மாணவி

மு.கீதாயினி - A.I பேராதனை பல.கழ.டிப்ளோமா பட்டதாரி

க.றஜிபன் கணனியல் டிப்ளோமா பட்டதாரி (லண்டன்)

ரா.துஷாரகன் - வெளிவாரி பட்டப்படிப்பு - பேராதனை - மாணவன்

அ.பஞ்சமூர்த்தி - தொழி.நு.கல்லூரி - மின்னியல் இலத்திரனியல் டிப்ளோமா (லண்டன்)

**க.பொ.த (உ.த)ரத்துடன் அரச உத்தியோகத்தர்.**

இ.சிவஞானம் J.P - அச்சுவேலி ப.தெ.வ.அ.சங்கம் லிகிதர்

வ.திருஞானசம்பந்தர் - அச்சுவேலி ப.தெ.வ.அ.சங்கம் பொதுமுகாமையாளர்

க.தங்கேஸ்வரன் - தபால் அதிபர்

க.இராஜேஸ்வரன் - மின்சாரசபை எழுதுவிளைஞர்

சி.சுந்தரம் - C.T.B பரிசோதகர்

வசாவிளான் சின்னத்துரை G.S

குட்டியப்புலம் சந்திரன் - அரச களஞ்சி பொறுப்பாளர்.

பு.நாகமுத்து K.K.S சீமெந்து தொழிற்சாலை கிருஷ்ணன்வாசன் G.S

நாகேந்திரம் G.S

இ.பஞ்சாட்சரம் - அச்சுவேலி ப.நோ.கூ.ச.கணக்காய்வாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.கருணாகரன் - வங்கி பிரதம பாதுகாப்பாளர்

த.வஸ்தலகுமாரன் - கைத்தொழிற்பேட்டை

பூ.கமலா - முன்பள்ளி ஆசிரியை

கோ.கௌஸ்துயமணி - கணக்காளர்

கி.மகேந்திரம் - சோதிடர் - நீர்ப்பாசன திணைக்களம் - எழுதுவினைஞர்

மு.மகாலிங்கம் - தபால் அதிபர்

செ.சிவஞானம் - நீர்ப்பாசன திணைக்களம் எழுதுவினைஞர்

வ.நாகராசா - G.S

பொ.தங்கராசா - J.P.C.T.B பரிசோதகர்

சி.அருந்தவம் - அச்சுவேலி ப.நோ.கூ சங்கம் - முகாமையாளர்

அ.கீர்த்திகா - T.O

த.பூங்கோதை - அரச முகாமைத்துவ உதவியாளர்

ச.முரளிதரன் - முகாமைத்துவ உதவியாளர் - ஹோட்டல்

த.சநோக்ஷன் - வங்கி பாதுகாப்பாளர்

அ.ராகவன் - வங்கி பாதுகாப்பாளர்

தி.கபிலன் - வங்கி பாதுகாப்பாளர்

சி.பவிதரன் - பொலிஸ் உத்தியோகத்தர்

ம.சுதர்சன் - சமுர்த்தி உத்தியோகஸ்தர்

ம.சுபாகரன் - தபால் கந்தோர் ஊழியர்

ஆ.றமணன் - சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்

ஆ.றகுணன் - (T.O) தொழிநுட்ப உத்தியோகத்தர்

தி.கோகுலன் - முகாமைத்துவ உதவியாளர் - ஹோட்டல்

செ.சதீஸ்குமார் - விளையாட்டு உத்தியோகஸ்தர் (S.O)

செ.வானுஜன் - வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர்

செ.வாசகன் - அரச பண்ணை ஊழியர் (D.L)

சி.ஐகுலமதி ஆசிரியை (தொண்டர்) ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி

க.ரவீந்திரன் காப்புறுதி நிறுவனம் - பிரதம முகவர்

சி.சதானந்தன் - பாதுகாப்பு உத்தியோகத்தர்

சி.பத்மகாகிதா சுகாதார பணிமனை ஊழியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சு.விருந்தா முன்பள்ளி ஆசிரியை A/L

ம.கௌசலா தேவி - முன்பள்ளி ஆசிரியை (O/L)

செ.சிவேந்தினி - முன்பள்ளி ஆசிரியை (O/L)

அ.விவேகா - முன்பள்ளி ஆசிரியை (O/L)

நா.சுவீதினி - பொறுப்பாசிரியை அருள் முருகன் அறநெறிப் பாடசாலை

பா.சுவீத்தியா - ஆசிரியை அருள்முருகன் அறநெறிப் பாடசாலை

ச.கீதா - ஆசிரியை அருள்முருகன் அறநெறிப் பாடசாலை

சி.கயல்விழி - ஆசிரியை அருள்முருகன் அறநெறிப் பாடசாலை

நா.அமுதா - ஆசிரியை அருள்முருகன் அறநெறிப் பாடசாலை

சு.விருந்தா ஆசிரியை அருள்முருகன் அறநெறிப் பாடசாலை

த.கோபிகா ஆசிரியை அருள்முருகன் அறநெறிப் பாடசாலை

பொ.பிரபாகரன் கணனி உத்தியோகத்தர் - மாற்றுத்திறனாளி

பெ.விமலராணி ஸ்ரீவிஷ்ணு தொண்டர் ஆசிரியர் பின்னர் அரசவைத்திய சாலை ஊழியர்

ம.தமிழ்ச் செல்வி ஈஸ்வரன் அறநெறிப்பாடசாலை, மற்றும் முன்பள்ளி ஆசிரியை

சீ.சஞ்சீவன் C.T.B நடத்துனர்

கு.யுகேந்திரன் - டயலொக்

கு.ஜனார்த்தன்

**க.பொ.த.சா.த.தகைமை அரச உத்தியோகத்தர்**

த.பொன்னுத்துரை - ப.தெ.வ.அ.சங்கம் காசாளர்

கி.இராசையா - பிரதேசசபை ஊழியர்

சி.உதயமூர்த்தி - மாநகரசபை ஊழியர்

பொ.கிருபாகரன் - மாநகரசபை ஊழியர்

அ.விஜயலதா - அரசமருத்துவமனை ஊழியர்

த.இராஜேஸ்வரி - அரசமருத்துவமனை ஊழியர்

செல்வி செபமாலை - அரசமருத்துவமனை ஊழியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.கமலநாதன் - அரசமருத்துவமனை ஊழியர்

மு.யோகேஸ்வரன் அரசமருத்துவமனை ஊழியர்

வை.கோமதி அரசமருத்துவமனை ஊழியர்

பொ.நிரோஜன் வங்கி பாதுகாப்பு ஊழியர்

தி.கபிலன் வஙங்கி பாதுகாப்பு

ப.நிமர்சன் புகையிரதப்பகுதி ஊழியர்

ப.லதீபன் ப.தெ.வ.அ.சங்கம் - ஊழியர்

இ.ரேணுதாஸ் ப.தெ.வ.அ.சங்கம் - ஊழியர்

செ.தபோதினி முன்பள்ளி ஆசிரியை

வ.ஜயாத்துரை அச்சுவேலி கூ.ச ஊழியர்

செ.சத்தியசீலன் அச்சுவேலி கூ.ச ஊழியர்

சி.திவ்விய நாயகம் தவில் வித்தவான் - கலா பூஷணம் பட்டம் பெற்றவர்.

**ஸ்ரீ விஷ்ணு மாணவரில் மக்கள் பிரதிநிதிகள்**

| | | |
|---|---|---|
| யாழ்மாநகரசபை உறுப்பினராக | - | அ.பரஞ்சோதி J.P |
| வடமாகாண சபை உறுப்பினராக | - | அ.பரஞ்சோதி J.P |
| வலி-கிழக்கு பிரதேசசபை உறுப்பினர் | - | ப.கந்தசாமி (அமரர்) |
| வலி-கிழக்கு பிரதேசசபை உறுப்பினர் | - | சி.நவரத்தினம் |
| வலி-கிழக்கு பிரதேசசபை உறுப்பினர் | - | கா.கதிர்காமநாதன் |

**சமாதான நீதிவான்கள் – ஸ்ரீ விஷ்ணு மாணவர்**

அ.பரஞ்சோதி, பெ.தம்பிராசா, செ.தவராசசிங்கம், இ.சிவஞானம், க.மகேந்திரம், சி.இதயதீபன், பொ.தங்கராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2005 – 2017 வரை கால கா.பொ.த உயர்தர வகுப்புக்கு தகைமை பெற்றுள்ளோர்.**

2005 - க.துவாரகன் ச.தனுவிந்தன் த.நிதர்ஷன்

2006 - த.சனோஜன் ந.வின்சன்

2007 - அ.ராகவன் செ.வானுஷன்
ஜெ.சுபாங்கி யோ.கயல்விழி

2008 - த.கஜன் ஆ.கீர்த்திகன்

2009 - செ.வாசகன் பு.கபிலா தெ.மேர்ஷி

2010 - ம.தனுசியா

2011 - மு.பார்த்தீபன்

2012 - சி.தனுஷன் ச.திலக்ஷன் ந.கேதுஷன்
ம.லக்ஷன் அ.சங்கீதன் பு.மிதுஷா

2013 - ஆ.தர்மீகன் தே.தர்ஷனா சௌ.மதிதாரா

2014 - மு.தினுஷன் மு.தினோஜன் சி.சிந்தாரகன்

2015 - த.தனுசியா உ.தரணிகன் அ.கேனிசா
வி.பவிக்னா க.கபினா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2016 - கு.சுலக்ஷன் சி.சரத்வாஜ் ந.கவிஸ்னா
மோ.கபிலன் த.தரண்யா உ.லென்சனா
பா.சௌந்தர்யா

2017 - த.விதுஷாந்தன் சு.நிந்துஷன்

**5ம் தரம் – புலமைப்பரிசில் பரீட்சையில் உயர் சித்தி பெற்ற மாணவர்**

| ஆண்டு | மாணவர் பெயர் | தரம்6இல் கல்விகற்கும் பாடசாலை |
|---|---|---|
| | சீ.ஜீவிதன் | யாழ் - பரியோவான் கல்லூரி |
| | சி.சிந்துஜன் | யாழ் - மத்தியகல்லூரி |
| | மு.சயந்தன் | யாழ் - இந்துக்கல்லூரி |
| | மு.பார்த்தீபா | யாழ் - வேம்படி மகளிர் கல்லூரி |

ஸ்ரீ விஷ்ணுவின் 60 ஆண்டு காலப்பகுதியில் (1957 - 2017) தேசிய மட்டத்தில் விருது பெற்ற மாணவர்.


ஸ்ரீ விஷ்ணுவின் 60 ஆண்டு காலப்பகுதியில் (1957 - 2017) க.பொ.த.சா.த.பரீட்சையில் அதிகூடிய சித்தியைப் பெற்ற முதன்மை மாணவன். நவரத்தினம் - கவிஸ்னா (2016), கெங்காதரன் நந்தியா - (உயரம் பாய்தல் 2018)

**தொகுப்பு :- ஸ்ரீ விஷ்ணுபிரியன் (2018)**
**புத்தூர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆதன டாப்பாவது**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் [illegible]

பகுதி [illegible] கோவிற்பற்று [illegible] இறை

[illegible]

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கத்தாட்சியாக இவ்வுறுதியின் திறத்தாராகிய

கா இதன்கீழ்க் கையொப்பம் வைக்கும் சாட்சிகள் முகதாவில்

விருந்து இத்தகைய

மூன்று பிரதிகளிலும் கையொப்பம் வைக்கிறேன்.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஆண்டு

மாதம் ம் திகதி

இதன்கீழ்க் கையொப்பம் வைக்கும் சாட்சிக்காரராகிய காங்கள் குறித்த உறுதி முடிப்புக்காரர் டைய வர் பெயர் தொழிலாகிய இவைகளை கன் கறிவோமென் றறிக்கையிடுகிறோம்.

சி. அரியகுட்டி

சாட்சிகள் :

1\. வ. வேலு

2\. இ. நாராயணன்

பிரசித்த நொத்தாரிஸ்.

மேலே கண்டிருக்கிற சாதனத்தைச் சொல்லப்பட்ட

யாழ்ப்பாணப் பகுதியின் பிரசித்த நொத்தாரிஸ் தாமோதரம்பிள்ளை குணரத்தினம் ஆகிய நான் இதிற் கையொப்பம் வைத்திருக்கும் சாட்சிக்காரர்

ஆகிய இவர்கள் முகதாவில் வாசித்து விளங்கப்படுத்தினேனென்றும் உறுதி

சாட்சிகளும் என் முன்பாகவும் அவர்களொருவர்க்கொருவர் முன்பாகவும்

விருந்து 1960 -ம் ஆ ம் 1. -க்க

யில் ஒரேசமயத்திற் கையொப்பங்களை வைத்தார்களென்றும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

~~இவ்வுறுதிச் சாதனத்தி~~

இணைப்பிரதி ரூபா 15/- ரூபா — பெறுமதியான

உ முத்திரை கூதாப்பிரதி ஒரு ரூபா முத்திரை ஒன்றும்

கொண்டிருக்கிற ம்

சொல்லப்பட்ட நொத்தாரிஸ் ஆகிய நான் இதனைக்கொண்டத்தாட்சிப்படுத்துகின்றேன்.

அத்தாட்சிப்படுத்திய திகதி;

1960 ஆ

ம் 1. உ

T. GUNARETNAM
PROCTOR S.C. &
NOTARY PUBLIC
JAFFNA

பிரசித்த நொத்தாரிஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed by-Mathi Colours, Nallur. 021 222 9285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org